நம்பகத்தன்மையை மேம்படுத்தல்

ஆண்டறிக்கை
2021



SLAASM3

இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு
நியமங்களின் கண்காணிப்புச் சபை

இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபையானது 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டதாகும்.

இந்த சபையின் தொழிற்பாடுகள் குறித்துரைக்கப்பட்ட வியாபாரத் தொழில் முயற்சிகள் (பக்கம் 69 இனை பார்க்கவும்) நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பு, முன்வைத்தல் மற்றும் கணக்காய்வின் போது அவை இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுடனும் இலங்கைக் கணக்காய்வு நியமங்களுடனும் இணங்குகின்றனவா என்பதனை கண்காணித்தலாகும்

உள்ளடக்கம்

சபையின் உறுப்பினர்கள்.....01

சபையின் உறுப்பினர்கள் 2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறு 02

சபையின் அவதானிப்பாளர்கள் / அழைப்பாளர்கள் 2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறு.....06

சபையினால் நியமிக்கப்பட்ட உப குழுக்கள் - 2021.....07

சபையின் தற்போதய பதவியணியினர்.....08

சபையின் தொழில்நுட்ப பதவியணியினர்.....09

செயற்பாடுகளின் மீளாய்வு 2021.....10

2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நிதிக்கூற்றுகள் தொடர்பான மீளாய்வின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள்.....23

2021 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் 28

2021 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு தொடர்பான கண்டுபிடிப்புகள்.....29

இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு.....34
சபையின் செயலாற்றலை மேம்படுத்துவதற்காக பின்பற்றப்பட வேண்டிய குறுங்கால மற்றும் நடுத்தர கால நடவடிக்கைகள

செயலாற்றல் புள்ளிப் படிவம்.....36

2021 ஆம் ஆண்டில் மீளாய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன இணங்கக்கூடிய குறித்துரைக்கப்பட்ட வியாபார முயற்சிகளின் (SBE's) அட்டவணை.....38

2021 ஆம் ஆண்டின் போது மீளாய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்கிடையே அவதானிப்புக்களுடன் இணங்கிய அவதானிப்புக் கடிதங்கள் மூலம் தொடர்பு கொள்ளப்பட்ட குறித்துரைக்கப்பட்ட வியாபார முயற்சிகளின் (SBE's) அட்டவணை.....43

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்காத பட்டியலிடப்பட்ட கம்பனிகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களும் 47

2021 ஆம் ஆண்டின் போது இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவத்தினால் நியமங்களை ஏற்படுத்துவதுடன் தொடர்புடைய செயற்பாடுகள் 48

கணக்காளர் தலைமை அதிபதியின் அறிக்கை.....50

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட சிக்கல் தொடர்பான தற்போதைய நிலைமை 55

நிதி நிலைமைக் கூற்று.....57

நிதிச் செயலாற்றல் கூற்றும் விரிவான வருமானக் கூற்றும்.....58

தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று.....59

காசுப்பாய்ச்சல் கூற்று.....60

நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்.....61

குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்கள் - SBEs 69

ஆண்டறிக்கை
2021

சபையின் உறுப்பினர்கள்

செல்வி. கே எம் ஏ என் தவுலகல *FCMA (UK), MBA (USJP) MSc (Fin. and Busi. Econ.)(UK)* உதவி ஆளுநர், இலங்கை மத்திய வங்கி	தலைவர் 2021 திசெம்பர் 31 வரை	
டி என் ஆர் சிறிவர்தன *B.A. (Hons), LLB, LLM Attorney-at-Law, LLM Attorney -at -Law* **எஸ்.திசாநாயக்க** கம்பனிகள் பதிவாளர் நாயகம்	பதவி வழி உறுப்பினர் (2021 சனவரி 2 வரை) (2021 யூலை 8 முதல்)	
எச் எம் டப் சீ பண்டார *B.Com (Sp.), LLB, Attorney -at -Law* உள்நாட்டு இறைவரி ஆணையாளர்	பதவி வழி உறுப்பினர்	
சீ மெண்டிஸ் *Attorney -at -Law* பணிப்பாளர் நாயகம் - இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு	பதவி வழி உறுப்பினர்	
டபிள்யு டபிள்யு ஜெ சீ பெரேரா *FCA,FCMA, B.Sc.(B.Admin), CFE* பங்காளர் *KPMG*	நியமன உறுப்பினர்	இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம்
எச் எம் ஏ ஜயசிங்க *FCA, FCMA, CIPFA* முன்னால் தலைவர், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம் உள்நாட்டு முகாமைப் பனிப்பாளர் Ernst & Young இலங்கை மற்றும் மாலைதீவுகள்	நியமன உறுப்பினர்	இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம்
எஸ் எம் எஸ் எஸ் பண்டார *FCA, MBA (Col.) B.Sc (Acc. and Fin. Management) (USJP)* தலைவர், இலங்கை பட்டயக் கணக்காளர், பங்காளர் - *B R De* சில்வா அன்ட் கம்பனி	நியமன உறுப்பினர்	இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம்
பீ ஆர் ஏ குணரத்ன *ACMA(UK), CGMA, ACCA Affiliate, Dip.in Banking and Fin., B.Sc. Eng. (Hons), MBA (UK)* நிதித் துறை தலைவர் - *Resus Energy PLC*	நியமன உறுப்பினர்	ஐக்கிய இராச்சியத்தின் முகாமைத்துவ பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் இலங்கை பிரிவு
ஆர் ரீ அமரசூரிய *LLB (Hons.) (Col), FCMA (UK), FCMA (SL), CGMA, Attorney -at –Law* முன்னால் செயலாளர் - இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் முன்னால் ஆணைக்குழு உறுப்பினர் - இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு	நியமன உறுப்பினர்	இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்
பீ டி சமரசிங்ஹ *FCA, FCMA (UK), MBA* குழுப் பணிப்பாளர் / பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் - ஓவர்சீஸ் ரியலிட்டி (சிலோன்) பீஎல்சீ	நியமன உறுப்பினர் (2022 சனவரி 31 வரை)	இலங்கை வர்த்தக கழகம்
கே கே எஸ் குணவர்தன *BA (Hons.) Econ. Sp., Dip.in Hypermedia Eng., Dip.in Multimedia Technology, PGDip in Busi. and Fin. - ICA (SL)* முகாமைத்துவ பணிப்பாளர் / சிரேஷ்ட நிறைவேற்று உத்தியோகத்தர் - கிரபிக் சிஸ்டம்ஸ் (பிரை) லிமிடட்	நியமன உறுப்பினர்	இலங்கை வர்த்தக கழகங்களின் சம்மேளனம்
ஏ. குணசேகர *FCA, FCMA, MBA* சிரேஷ்ட உதவித் தலைவர், இடர் உத்தியோகத்தர் டீஎப்சீசீ.வங்கி பீஎல்சீ	நியமன உறுப்பினர் (2021 திசெம்பர் 31 வரை)	இலங்கை வங்கியாளர் சங்கம்
பேரா ஏ ஜயமஹா *PhD, (USQ- Aus) M.Com, (UoK)B.Com, (UoK)FCA* பீடாதிபதி – பட்டதாரி கல்வி பீடம், களனி பல்கலைக்கழகம்	நியமன உறுப்பினர்	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
செல்வி எம் டி ஜி எல் பெரேரா *FCA, MBA*		சபையின் செயலாளர்

சபையின் உறுப்பினர்கள்

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு



கே எம் ஏ என் தவுலாகல

FCMA (UK), MBA (USJP)

MSc (Financial and Business Economics), University of Essex, UK

திருமதி. தவுலகல, சபையின் தலைவராவர். அவர் இலங்கை மத்திய வங்கியின் உதவி ஆளுனராவர் அவர் நிதி, கணக்காய்வு, நிதிய முகாமைத்துவம், ஒழுங்குபடுத்தல், பேரின முன்னெச்சரிக்கை அவதானிப்பு, மனித வள முகாமைத்துவம் மற்றும் இடர் முகாமைத்துவம் போன்ற துறைகளை மேவுகை செய்யும் வகையில் இலங்கை மத்திய வங்கியில் 31 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சேவைக் காலத்தை கொண்டுள்ளார்.



எஸ் திசாநாயக்க

LLM, Attorney – at – Law

கம்பனி பதிவாளர் நாயகமாக திரு திசாநாயக்க, அவர்கள் இலங்கை சட்டமா அதிபர் திணைக்களத்தில் பிரதி சொலிசிட்டர் ஜனரலாக இருப்பதுடன் தற்போது கம்பனிப் பதிவாளராக கடமையேற்பதற்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் (PSC) விடுவிக்கப்பட்டுள்ளார். திசாநாயக்க, அவர்களுக்கு சட்டமா அதிபர் திணைக்களத்தில் குற்ற மற்றும் சிவில் ஆகிய இரண்டு துறைகளிலும் அனுபமுள்ளதுடன் 2010 பெப்ரவரி முதல் 2011 யூலை வரை ஊழலுக்கு எதிரான பிஜி சுயாதீன ஆணைக்குழுவின் மேலாளராக சேவை புரிந்துள்ளார். திரு. திசாநாயக்க இலங்கை கணக்கீட்டு நியமங்கள் குழுவினதும் இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிலும் இலங்கை பிணையங்கள் மற்றும் பாவார்த்தனை ஆணைக்குழுவின் பதவி வழி சபை அங்கத்தவராகவும் உள்ளார்



எச் எம் டப் சீ பண்டார

B.Com (Sp.), LLB, Attorney – at – Law

திரு. பண்டார தற்போது உள்நாட்டு இறைவரி ஆணையாளர் பதவியினை வகிக்கும் அவர் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தில் 34 ஆண்டுகளுக்கும் மேலாக சேவை புரிந்து வருகின்றார். அவர் அத்திணைக்களத்தின் செயற்திட்ட பணிப்பாளராகவும் RAMIS (வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் முறைமை) செயற்திட்டத்தின் இணை குழு உறுப்பினராகவும் உள்ளார். திரு. பண்டார இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியல் கழகத்தின் அங்கத்தவராவர்.



சீ மெண்டிஸ்

Attorney – at – Law

திரு. மெண்டிஸ் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ஆவர்.

சபையின் உறுப்பினர்கள்

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு



டபிள்யூ டபிள்யூ ஜே சி பெரேரா
FCA, FCMA, B.Sc (B.Admin), CFE

திரு பெரேரா, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் முன்னாள் தலைவரும், இலங்கை KPMG இன் பங்காளருமாவார். அவர் முஆபு இன் இடர் ஆலோசனை மற்றும் தடய சேவைகளை வழி நடாத்துகின்றார். அத்துடன் அவர் ஐக்கிய அமெரிக்காவின் சான்றுறுதிப்படுத்திய மோசடி பரிசோதகர் கழகத்தின் உறுதிப்படுத்தப்பட்ட மோசடி பரிசோதகராகவும் ஐக்கிய அமெரிக்காவின் உள்ளகக் கணக்காய்வாளர் நிறுவகத்தின் அங்கத்தவராகவும் செயற்படுகின்றார்.



எச் எம் ஏ ஜயசிங்ஹ
FCA, FCMA, CIPFA

திரு. ஜயசிங்க இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் தலைவர் ஆவர். திரு ஜயசிங்ஹ Ernst & young நிறுவனங்களின் இலங்கை மற்றும் மாலைதீவுகளின் நாட்டின் நிர்வாகப் பங்காளராக உள்ளார். அவர் எர்னஸ்ட் அன்ட் யங்கில் வங்கி மற்றும் நிதிச் சேவை நடைமுறைக்கு பொறுப்பான தலைவராகவும் உள்ளார்.

கணக்கீடு மற்றும் கணக்காய்வில் 39 வருட விரிவான அனுபவமுள்ள திரு. ஜயசிங்க, தெற்காசிய கணக்காளர்கள் சம்மேளனத்தின் (SAFA) கணக்கீட்டு நியமங்கள் குழு மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தில் நியதிச்சட்ட கணக்கீட்டு நியமங்கள் குழு என்பவற்றின் தலைவராக பணியாற்றுகிறார். அவர் பல ஏனைய சட்ட அமைப்புக்கள், தொழில்முறை சங்கங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் உறுப்பினராக பணியாற்றுகிறார். சில பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் கணக்காய்வுக் குழுக்களின் ஆலோசகராகவும் பணியாற்றுகிறார்.



எஸ் எம் எஸ் சஞ்ஜய பண்டார
FCA, MBA (Colombo) B.Sc Accountancy and Financial Management (USJP)

திரு. பண்டார இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் தலைவர். அவர். B R De Silva அன்ட் கம்பனி பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் பங்காளராக உள்ளார். அத்துடன் அவர் காப்பீட்டு சேவைகள் மற்றும் நிதி அறிக்கையிடலில் விசேடத்துவத்துடனான 24 ஆண்டு நடைமுறை அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

அவர் ஆசிய பசிபிக் கணக்காளர்கள் கூட்டமைப்பு (CAPA) மற்றும் தெற்காசிய கணக்காளர்கள் சம்மேளனம் (SAFA) ஆகியவற்றின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் உள்ளார். மேலும், அவர் களனிப் பல்கலைக்கழகத்தில் ஆளுகைச் சபை உறுப்பினராக மற்றும் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் ஆணையாளர் ஒருவராகவும் உள்ளார்.



பி ஆர் ஏ ஐ குணரத்ன
ACMA (UK), CGMA, ACCA Affiliate, Dip. in Banking and Finance, B.Sc. Eng. (Hons), MBA (UK)

திரு. குணரத்ன அவர்கள் Resus Energy பெதுதுக் கம்பனியி நிதிப் பிரிவின் தலைவராகவும் கணக்கீடு மற்றும் நிதித் துறையில் 11 ஆண்டு அனுபவத்தை கொண்டுள்ளார். கடந்த காலங்களில் அவர் Brandix தொகுதி மற்றும் KPMG இலும் சேவையாற்றியுள்ளார். அவர் சர்வதேச சான்றுறுதிப்படுத்தப்பட்ட தொழில்துறை கணக்காளர்கள் சம்மேளனத்தின் மத்திய கிழக்கு, தெற்காசியா மற்றும் வட ஆபிரிக்கா பிராந்திய ஆலோசனைக் குழுவின் அங்கத்தவராக உள்ளதுடன் CIMA நிறுவனத்தின் சிரேஷ்ட விரிவுரையாளருமாவார். இலங்கை, மியன்மார், வியட்நாம், நைஜீரியா மற்றும் ஆசிய பசுபிக் பிராந்தியங்கள் உள்ளடங்கலாக பல்வேறு பூகோள பிராந்தியங்களில் CIMA விரிவுரைகளை நடாத்தியுள்ளார்.

சபையின் உறுப்பினர்கள்

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு



ஆர் ரீ அமரசூரிய
LLB (Hons.) (Colombo), FCMA (UK), FCMA (SL), CGMA, Attorney-at-Law

திரு. அமரசூரிய இலங்கையில் உள்ள மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் ஒரு நிரந்தர வழக்கறிஞராக உள்ளார், மேன்முறையீட்டுச் சட்டம் மற்றும் அரசியலமைப்பு மற்றும் பொதுச் சட்டத்தின் அனைத்து அம்சங்களிலும் நிபுணத்துவம் பெற்றுள்ளதுடன் சிவில், ஒப்பந்தம், வணிகம், ஆதனம், வரியியல் வங்கியியல், தொழிலாளர் மற்றும் சட்டத்தின் ஏனைய துறைகள் உள்ளடங்கலாக பல்வேறு துறைகள் மற்றும் விடயங்களில் பல்வேறு விடய அறிவினை பெற்றுள்ளார்.

2013 ஆம் ஆண்டில், 40 வயதிற்குட்பட்ட மிகச் சிறந்த ஊஐஆயு உறுப்பினராக (இலங்கை) பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் (CIMA) பெறுமதிமிக்க CIMA ஸ்டார் கோல்ட் விருதைப் பெற்றார். அத்துடன் அண்மையில் 2021 இல் LMD - CIMA வுசயடைடியணநசள இல் ஒருவராக பெயர் சூட்டப்பட்டார்

அவர் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளராகவும், கொழும்பு பல்கலைக்கழகத்தின் பழைய மாணவர் சங்கத்தின் தலைவராகவும், இலங்கை சட்டக் கல்விக்கான ஒருங்கிணைந்த சபையின் உறுப்பினராகவும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சட்டக் கல்வித் துறையில் நிலையியல் குழுவில் உறுப்பினராகவும், இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தின் சட்ட பீடத்தின் ஆலோசனைக் குழுவின் உறுப்பினராகவும் மற்றும் இலங்கை தேசிய தொழில் நியாய சபையின் ஆளுகை சபை உறுப்பினராகவும் உள்ளார். அவர் ஆசியா மற்றும் பசுபிக் சட்ட சம்மேளனத்தின் (LAWASIA) நிறைவேற்றுக் குழு உறுப்பினராகவும் உள்ளார்.

அவர் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் (SEC) முன்னால் உறுப்பினராக உள்ளார்.



பி டி சமரசிங்ஹ
FCA, FCMA (UK), MBA

திரு. சமரசிங்ஹ, இலங்கையிலுள்ள முதன்மை ஆதனக் கம்பனியான ஓவர்சீஸ் ரியலிட்டி (சிலோன்) பீஎல்சீ இன் குழுப் பணிப்பாளர் / பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராவர். இவர் உற்பத்தி, பெருந்தோட்ட மற்றும் ரியல் எஸ்டேட் ஆகிய துறைகளில் 31 ஆண்டுகளுக்கும் மேலான தொழில்முறை மற்றும் முகாமைத்துவ அனுபவத்தைக் கொண்டுள்ளார். அவர் பல பொது பட்டியலிடப்பட்ட மற்றும் பட்டியலிடப்படாத நிறுவனங்களின் சபைகள் மற்றும் சபை உப குழுக்களின் உறுப்பினராகவும் பணியாற்றுகிறார்.

திரு. சமரசிங்க இலங்கை பணிப்பாளர்கள் நிறுவனம், இலங்கையின் தொழில்தருநர் சம்மேளனம், இலங்கை கைத்தொழில் கழகம் மற்றும் இலங்கை கொண்டமோனியம் டெவலப்பர்கள் சங்கம் போன்ற பல நிறுவனங்களில் முன்னாள் தலைவராக இருந்தார். அவர் இங்கிலாந்தின் (இலங்கை பிரிவு) பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் மற்றும் CIMA (UK) இன் முன்னால் பேரவை உறுப்பினராகவும் இருந்தார். மேலும் அவர் இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் கடந்த கால சபை உறுப்பினர் ஆகவும் இருந்தார்.

சபையின் உறுப்பினர்கள்

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு



கே கே எஸ் குணவர்த்தன

BA (Hons.) Economics Sp., Dip.in Hypermedia Engineering (Colombo), Dip.in Multimedia Technology (Colombo), PGDip in Busi. and Fin. - ICA (SL)

வரையறுக்கப்பட்ட கிராபிக் சிஸ்டம்ஸ் தனியார் நிறுவனத்தின் தலைவர் / முகாமைத்துவ பணிப்பாளரான திரு. குணவர்த்தன அச்சிடுதல், தகவல் தொழில்நுட்பம், கணக்கீடு மற்றும் நிதித் துறையில் 36 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

தற்போது திரு.குணவர்த்தன ஏற்றுமதி அபிவிருத்திச் சபையில் வர்த்தகத் தகவல் மற்றும் ஊக்குவிப்பு தொடர்பான ஆலோசனைக் குழுவின் தலைவராக உள்ளார். அவர் இலங்கை வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்தின் சிரேஷ்ட உப தலைவராகவும் மற்றும் பல ஏனைய கம்பனிகள் மற்றும் சங்கங்களின் சபைகளிலும் பணியாற்றுகிறார்.

திரு.குணவர்த்தன 1999 மற்றும் 2001 ஆம் ஆண்டுகளில் இலங்கை தொழில் முயற்சியாளர் விருதுகள் உட்பட பல சிறந்த விருதுகளைப் பெற்றவர்.



ஏ குணசேகர

FCA, FCMA, MBA (USJP)

வங்கியின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவத்தின் சிரேஷ்ட உப தலைவர் / பிரதம இடர் முகாமைத்துவ உத்தியோகத்தரான திரு. குணசேகர வங்கித் துறையில் நிதி முகாமைத்துவம், நிதித் தொழிற்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவம் ஆகிய துறைகளில 37 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

அவர் இதற்கு முன்னர் ஹட்டன் நஷனல் வங்கியின் பிரதம நிதி உத்தியோகத்தராகவும், DFCC வங்கியின் சிரேஷ்ட உப தலைவர் / பிரதம நிதி உத்தியோகத்தராகவும், பணியாற்றியுள்ளார்.

அவர் DFCC தொகுதியின் பல கம்பனிகளின் சபைகளிலும் சபை உப குழுக்களிலும் பணியாற்றுகிறார்.



பேராசிரியர் ஏ ஜயமஹ

PhD (USQ-Aus), M.Com (UoK), B.Com (UoK), FCA

பேராசிரியர் ஜயமஹ, களனிப் பல்கலைக்கழக கணக்கீட்டுத் துறையின் (UoK) கணக்கீட்டு பேராசிரியரும் UoK இன் பட்டதாரி கற்கைகள் பீடத்தின் பீடாதிபதியாகவும் உள்ளார்.

அவர் UoK இல் 39 ஆண்டுகளுக்கும் மேலான சேவை அனுபவத்தை கொண்டுள்ளதுடன் UoK இல் உள்ள வர்த்தக மற்றும் முகாமைத்துவக் கற்கைகள் பீடத்தின் மனித வள முகாமைத்துவ துறை, கணக்கியல் துறையின் தலைவராகவும், வணிக நிர்வாக நிகழ்ச்சித்திட்டத்தின் ஒருங்கிணைப்பாளராகவும் பணியாற்றியுள்ளார்.

அவருக்கு 2010 ஆம் ஆண்டு தத்துவக் கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டது. அவர் ஜயமஹா புஷ்பகுமார அன்ட் கம்பனியின் பயிற்சியாளரும் முன்னோடி பங்காளருமாக உள்ளதுடன் இலங்கை பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் இலங்கைப் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் நிறுவன மதிப்பாய்வின் மதிப்பாய்வாளராக தனது சேவையை வழங்குகிறார். அத்துடன் 2020 முதல் HDFC வங்கியின் இயக்குநராக உள்ளார்.

சபையின் அவதானிப்பாளர்கள் / அழைப்பாளர்கள்

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு

சட்டப்பூர்வ கணக்காய்வுக் குழு, தலைவர்



ரீ ஜே எஸ் ராஜகாரியர்

FCA, FCCA, FCMA, CGMA

திரு. ராஜகாரியர் இலங்கையிலுள்ள KPMG இன் பங்காளராவர். அவர் பொதுக் கணக்கீட்டு நடைமுறைகளில் 36 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சேவை அனுபவத்தைக் கொண்டுள்ளார். அவர் KPMG நிறுவனத்தின் கணக்காய்வு தலைவராக செயற்படுகின்றார். அவர் KPMG இன் மத்திய கிழக்கு மற்றும் தென் ஆசிய பிராந்தியத்தில் நிதிச் சேவைகளின் தலைவராக இருந்ததுடன் இலங்கைக்கான 'KPMG இன் நிதிச் சேவைத் துறைக்கு பொறுப்பாக உள்ளார். அவரின் வேலை வெளிப்பாடுகள் ஓமான், துபாய், மாலைதீவுகள் மற்றும் லண்டனில் இருந்த வெளிநாட்டு அனுபவத்தை குறிப்பிடலாம். அவர் 2018 – 2020 காலப்பகுதியின் போது இலங்கை ACCA இன் தலைவராகவும் சேவையாற்றியுள்ளார்.

திரு. ராஜகாரியர் அவர்கள் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் நியதிச்சட்ட கணக்காய்வு நியமங்கள் குழுவின் தலைவராகவும் சேவையாற்றுகின்றார். இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் ஏனைய சில குழுக்கள் மற்றும் பீடங்களில் சேவையாற்றி கொள்கைகளை உருவாக்குவதற்கு வழிகாட்டல்களை வழங்குபவராக செயற்பட்டு வருகின்றார்.

சபையின் அவதானிப்பாளர், திறைச்சேரி பிரதிநிதி



கே எஸ் தயாரத்ன

B.Sc. (Bus. Admin), MA, ACA

திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களத்தின் பணிப்பாளராகவுள்ள திருமதி. தயாரத்ன பொதுத் துறையில் 17 வருட அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

அவர் தேசிய மருத்துவ ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் பணிப்பாளர் சபை உறுப்பினராக செயற்படுகின்றார்.

பணிப்பாளர் நாயகம்



ஏ ஐ மொஹொட்டி

FCA, FCMA (UK), CGMA, BBA (Hons.), MBA (Leicester)

இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபையின் (SLAASMB) பணிப்பாளர் நாயகமாகவுள்ள திருமதி. மொஹொட்டி, நிதி மற்றும் வணிக முகாமைத்துவம் மற்றும் ஒழுங்குமுறை மற்றும் வர்த்தகத் துறைகளில் பல்வேறு வணிகப் பிரிவுகளில் கணக்காய்வு செய்வதில் 31 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

அவரது பணி வெளிப்பாடு SLAASMB இல் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களுடன் இணங்குவதை ஒழுங்குபடுத்துவதில் 21 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட சேவையை உள்ளடக்குகின்றது.

2021 ஆம் ஆண்டில் சபையினால் நியமிக்கப்பட்ட உப குழுக்கள்

கணக்காய்வுக் குழு

திரு. எஸ் எம் எஸ் எஸ் பண்டார - தலைவர்
பேராசிரியர் ஏ ஜெயமஹா - உறுப்பினர்
திருமதி கே எஸ் தயாரத்ன - உறுப்பினர்

ஊதிய குழு

செல்வி. கே எம் ஏ என் தவுலகல - தலைவர்
திரு. பீ டீ சமரசிங்க - உறுப்பினர்
திரு. பீ ஆர் ஏ ஐ குணரத்ன - உறுப்பினர்
திரு. ஆர் ரீ அமரசூரிய - உறுப்பினர்
திருமதி. கே எஸ் தயாரத்ன - உறுப்பினர்

தொழில்நுட்ப உப குழு

திரு. ஏ குணசேகர - தலைவர்
திரு. எச் எம் ஏ ஜயசிங்க - உறுப்பினர்
பேராசிரியர். ஏ ஜெயமஹா - உறுப்பினர்
திரு. பி டீ சமரசிங்க - உறுப்பினர்
திரு. சி மெண்டிஸ் - உறுப்பினர்

தகவல் தொழில்நுட்ப வழிநடாத்தல் குழு


திரு. பீ ஆர் ஏ ஐ குணரத்ன - தலைவர்
திரு. டப் டப் ஜே சீ பெரேரா - உறுப்பினர்
திரு. டி என் ஆர் சிறிவர்தன - உறுப்பினர் (2021 ஜனவரி 2 வரை)
திரு. எஸ் திசாநாயக்க - உறுப்பினர் (2021 ஜூலை 8 ஆந் திகதி முதல்)
திரு. கே கே எஸ் குணவர்தன - உறுப்பினர்
திருமதி. ஏ ஐ மொஹொட்டி - உறுப்பினர்

முரன்பாட்டு இணக்க தீர்வு குழு

திரு. சி மெண்டிஸ் - தலைவர்
திரு. ஆர் ரீ அமரசூரிய - உறுப்பினர்
திரு. டீ என் ஆர் சிறிவர்தன - உறுப்பினர் (2021 ஜனவரி 2 வரை)
திரு. எச் எம் டபிள்யூ சி பண்டார - உறுப்பினர்
திரு. ஏ குணசேகர - உறுப்பினர்

சபையின் தற்போதய பதவியணியினர்





1. திரு. கே சிவகுமார்
2. திருமதி. ஆஷா அஹமத்
3. திருமதி. அனுஷா ஐ மொஹெட்டி
4 திருமதி. மொனிடா என் பண்டார
5. திருமதி. ஹப்சா பீ ரஸ்ஸாக்
6. திருமதி. இமல்கா இத்தமல்கொட
7. திருமதி. துமிந்தா குருவத்த
8. திருமதி. ஆர் ஏ நதீஷானி மனோதிகா
9. திரு. எச் எஸ் யூ பி ஜயவர்தன
10. திருமதி. டீ எம் நிலன்தி பீ தன்தெனி
11 திருமதி. எப் ஷிரோமி அபேகோன்
12. கே. ரசிக்க எஸ் பண்டார
13. திருமதி. திலினிகா மென்மென்தாரச்சி
14. திருமதி. களனி ஹெட்டிஆரச்சி
15. திருமதி. எம் லக்மாலி ஹேவகே
16 திருமதி. எல் வத்சலா மல்லவாரச்சி

2021 திசெம்பர் 31 இல் சபையின் தொழில்நுட்ப பதவியணியினர்

திருமதி. அனுஷா ஐ மொஹொட்டி
FCA, FCMA (UK), CGMA, BBA (Hons.),
MBA (Leicester)
பணிப்பாளர் நாயகம்

திருமதி. ஆஷா அஹமத்
FCA, MBA (Col)
பிரதிப் பணிப்பாளர் நாயகம்

திருமதி. மொனிடா என் பண்டார
FCA,ACA(E&W) BB Mgt.(Acc) Sp
பணிப்பாளர், தொழில்நுட்பம்

திருமதி. ஹப்சா பீ ரஸ்ஸாக்
FCA, ACMA(UK),CGMA,MBA (Sri.J)
பணிப்பாளர், தொழில்நுட்பம்

திருமதி. எம் லக்மாலி ஹேவகே
FCA, ACMA(UK), CGMA, MBA (Sri.J)
பணிப்பாளர் தொழில்நுட்பம்

திருமதி. இமல்கா இத்தமல்கொட
ACA, B.Sc. (Fin) Sp
பணிப்பாளர், தொழில்நுட்பம்

திருமதி. திலினிகா மென்மென்தாரச்சி
FCA, B.Sc. (Acc) Sp. (Hons.)
உதவி பணிப்பாளர் தொழில்நுட்பம்

திருமதி. களனி ஹெட்டியாரச்சி
FCA, B.Sc. (Acc) Sp. (Hons)
உதவி பணிப்பாளர், தொழில்நுட்பம்

திருமதி.டி எம் நிலன்தி தன்தெனி
FCA, BBA (Acc) Sp.(Hons.), AIB (SL)
உதவி பணிப்பாளர், தொழில்நுட்பம்

திருமதி. எல் வத்சலா மல்லவாரச்சி
FCA, B.Sc. (Acc) Sp. (Hons.)
உதவி பணிப்பாளர், தொழில்நுட்பம்

2021 ஆண்டின் செயற்பாடுகளின் மீளாய்வு

1.அறிமுகம்

இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபையானது (SLAASMB) 1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டதுடன், அதன் தொழிற்பாட்டு செயற்பாடு 2000 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டது.. சட்டத்தில் முன்வைக்கப்பட்டிருக்கும் வரையறைகள் மற்றும் கட்டளை விதிகளின்படி சில நிறுவனங்கள் குறித்துரைக்கப்பட்ட வியாபாரத் தொழில் முயற்சிகளாக (SBE) இனங்காணப்பட்டுள்ளன (SBE - 68 இன் விளக்கத்திற்கு இலக்க, பக்கத்தை பார்க்கவும்).

நிதிக் கூற்றுகளை தயாரிக்கும் போது மற்றும் அவற்றை விளக்கும் போதும் இந்த ளுடீறு கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க அமைய வேண்டும், மற்றும் இந்த SBE களின் கணக்காய்வுகளை மேற்கொள்ளும்போது அவற்றின் கணக்காய்வாளர்கள் கணக்காய்வு நியமங்களுக்கு இணங்கவும் வேண்டும். இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை கணக்காய்வு நியமங்களுடனான இணக்கப்பாட்டினை கண்காணிக்க கூடிய வகையில் இச் சட்டத்தின்படி SBE கள் தமது வருடாந்த கணக்காய்வுக்குட்படுத்தப்பட்ட நிதிக் கூற்றுக்களை இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபைக்குச் (SLAASMB) சமர்ப்பிக்க வேண்டும்.

பெறப்பட்ட நிதிக் கூற்றுக்களை மீளாய்வு செய்தல், குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களின் கணக்காய்வுகளை மேற்பார்வை செய்தல், குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களும் அவற்றின் கணக்காய்வாளர்களும் நியமங்களுக்கு அமைவாக செயற்பட்டுள்ளனரா என்பதை ஆராய்ந்து அவ்வாறு செயற்படாத சந்தர்ப்பங்களில் அவற்றிற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்தல் ஆகிய துறைகளில் இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை தனது செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

பெற்றுக்கொள்ளப்பட்ட நிதிக் கூற்றுக்களை மீளாய்வு செய்வதன் மூலம், குறித்துரைக்கப்பட்ட வியாபாரத் தொழில் முயற்சிகளின் கணக்காய்வுகளை கண்காணிப்பதன் மூலம், மற்றும் குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களும் அவற்றின் கணக்காய்வாளர்களும் நியமங்களுக்கு அமைவாக செயற்பட்டுள்ளனரா என்பதை ஆராய்ந்து அவ்வாறு செயற்படாத சந்தர்ப்பங்களில் அவற்றிற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் SLAASMB தனது, செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. இச் சட்டத்தின் கீழ், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை கணக்காய்வு நியமங்கள் பிரகடனப்படுத்தப்படுகின்றன அல்லது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

பரிந்துரைகள் செய்வதற்காக மற்றும் நியமங்களை ஏற்றுக்கொள்வதில் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்திற்கு உதவி செய்வதற்காக இச் சட்டத்தின் கீழ் கணக்கீட்டு நியமங்கள் குழுவொன்றும் கணக்காய்வு நியமங்கள் குழுவொன்றும் நிறுவப்பட்டுள்ளது.

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம் சர்வதேச கணக்கீட்டு நியமங்கள் சபையினால் (IASB) உருவாக்கப்பட்ட சர்வதேச கணக்கீட்டு நியமங்கள் (IAS) மற்றும் சர்வதேச நிதியறிக்கையிடல் நியமங்கள் (IFRS) என்பவற்றின் அடிப்படையில் அமைந்த கணக்கீட்டு நியமங்களையே ஏற்றுக்கொள்கின்றன. அதேபோன்று, ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வு நியமங்கள், சர்வதேச கணக்காய்வு மற்றும் உறுதிப்படுத்தல் நியம சபையினால் (IAASB) உருவாக்கப்பட்ட சர்வதேச கணக்காய்வு நியமங்களை அடிப்படையாகக் கொண்டவையாகக் காணப்படுகின்றன.

தற்பொழுது நிறுவனத்தினால் அதன் சர்வதேச நியமங்களுக்கு இணங்க குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களும் அவற்றின் கணக்காய்வாளர்களினாலும் பின்பற்ற வேண்டிய 38 கணக்காய்வு நியமங்களும் 42 கணக்கீட்டு நியமங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

2. ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகளில் கொவிட் 19 கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் பாதிப்பு

சுகாதார துறையினால் விதிக்கப்பட்ட Covid 19 தொற்றுநோய்க் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் காரணமாக ஏற்பட்ட தகவல் பாய்ச்சலை மட்டுப்படுத்தியதன காரணமாக நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதிலும், குறித்தரைக்கப்பட்ட முயற்சிகள் மற்றும் கணக்காய்வுகளை நிறைவுசெய்வதிலும் கணக்காய்வாளர்களால் முகங்கொடுத்தல் சவால்கள் 2021 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து காணப்பட்டன.

அதன் பிரகாரம் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபையால் காணப்படும் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை உயர்ந்த வகையில் பயன்படுத்துவது தொடர்பாக தமது கவனத்தை தொடர்ச்சியாக செலுத்துவதுடன் அதன் பெறுபேறாக குறித்துரைக்கப்பட்ட வியாபார முயற்சிகளின் நிதிக்கூற்றுக்களில் மென்பொருள் பிரதிகளை முடியுமானளவு பெற்றுக்கொள்ளல் மற்றும் நிகழ்நிலை ஊடாக கணக்காய்வு பரிசோதனைகளை நடாத்துதல் அல்லது பௌதீக கோவைகள் தொடர்பாக கணக்காய்வு குழுவொன்ற இல்லாமல் கணக்காய்வு பரிசோதனை செயற்பாடுகளை மேற்கொள்ளல் இடம்பெற்றது எவ்வாறாயினும் அவ்வாறான சகல செயற்பாடுகளினால் இறுதி தீர்மானத்திற்கு வருவதற்கு முன்னர் இனங்காணப்பட்ட சிக்கல்களுக்கு பொறுப்பேற்பதற்கு குறித்துரைக்கப்பட்ட வியாபார முயற்சிகளுக்கும் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபையின் பதவியணியினர் வீடுகளிலிருந்து கடமைகளை நிறைவேற்றியமை மற்றும் சில கணக்காய்வு நிறுவனங்கள் மற்றும் பதவியணியினரால் முகங்கொடுக்கும் அணுகுமுறை வரையரைகள் காரணமாக குறித்துரைக்கப்பட்ட முயற்சியாளர் களிடமிருந்தும் அல்லது கணக்காய்வாளர்களிடமிருந்தும் மேலதிக தகவல்களைப் பெற்றக்கொள்வதற்காக இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபை நடைமுறையில் முடிமான அளவு இலத்திரனியல் ஊடகம் பயன்படுத்தப்பட்டது.

2021 ஆண்டின் செயற்பாடுகளின் மீளாய்வு

தற்கும் ஏற்படுத்தின. வருடாந்த கணக்காய்வு கூற்றுக்களை SLAASMB இற்கு கையளிப்பதிலும் கணக்காய்வுக் குழுவின் முன்னிலையில் நடைபெறும் கணக்காய்வுகளின் நடவடிக்கைகளிலும் இதன் தாக்கம் காணப்பட்டது. மேலும், குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களின் மற்றும் SLAASMB இன் ஊழியர்களின் வீட்டில் இருந்து வேலை செய்தல் மற்றும் சில கணக்காய்வு நிறுவனங்கள் மற்றும் அவற்றின் பணியாளர்கள் எதிர்கொள்ளும் அணுகல் கட்டுப்பாடுகள் காரணமாக மற்றும் மேலதிக தகவல்களைத் தேடும் போது குறித்துரைக்கப்பட்ட வியாபார முயற்சிகளைத் தொடர்புகொள்வதற்கு தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பின் பயன்பாட்டை அதிகரிப்பதற்காக பின்பற்றப்பட்ட நடைமுறைகளை மாற்றுவதற்கு வழிவகுக்கும் மீளாய்வு வழிமுறைகளை SLAASMB இனால் மறுபரிசீலனை செய்ய வேண்டியேற்பட்டது.

இதன் விளைவாக, அறிக்கைகளை அணுகுதல், கடிதங்களை தயாரித்தல், தொழில்நுட்ப கலந்துரையாடல்களை நடாத்துதல், அறிக்கைகளை நாளதுவரையாக்குதல், புதுப்பித்தல் மற்றும் குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களுடன் கணக்காய்வுகள் மற்றும் கூட்டங்களை நடாத்துதல் போன்றவற்றில் பணியாளர்கள் இலத்திரனியல் ஊடகம் மூலம் மீளாய்வுகளை அணுகுவதன் மூலம் இப் புதிய வாய்ப்புக்கள் விரிவாக்கப்பட்டன.

இருப்பினும், அதிக அளவில் காணப்படும் நிதிக் கூற்றுக்களை அணுகுவதிலும், குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்கள் மற்றும் கணக்காய்வாளர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெறுவதிலும் உள்ள இயல்பான வரையறைகள் காரணமாக, SLAASMB இனால் நிதிக்கூற்றுக்களின் மொத்த உள்ளடக்கம் திட்டமிட்டபடி பராமரிக்கப்படுவதை உறுதிசெய்வதற்கு பல்வேறுபட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டது.

அவை இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு மற்றும் கணக்காய்வுகளின் பரிசோதனை விசேட சந்தர்ப்பங்கள் தொடர்பான பிரிவுகளின் கீழ் விவரிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, சகல வேளைகளிலும் பதவியணியினர் மற்றும் தொடர்புடைய தரப்பினரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியவாறு தொழில்நுட்ப முன்னேற்றத்தின் உயர்ந்த பங்களிப்பினைப் பெற்று பதவியணியினரின் இயலளவை வளர்ப்பதற்கான நடவடிக்கைகள் நிகழ்நிலை அமர்வுகள் மூலமாக நடாத்தப்பட்டன.

SLAASMBயின் சட்டப்பூர்வ செயல்பாடுகளை நிறைவேற்றுவதற்காக வருடத்தினுள் மேற்கொள்ளப்பட்ட முக்கிய முன்னெடுப்புக்கள் மற்றும் செயல்பாடுகள் பற்றிய சுருக்கமான விளக்கம் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

3. நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு

3.1 மீளாய்வின் போது பின்பற்றப்படும் நடைமுறைகள்

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போதும் சமர்ப்பிக்கும் போதும் குறித்துரைக்கப்பட்ட வியாபார முயற்சிகள் **(SBE)** இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கப்பாட்டினை உறுதி செய்வதற்காக SLAASMB இனால் நிதிக்கூற்றுக்கள் மீளாய்வுகள் செய்யப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்தல் இலங்கை கணக்கீட்டு நியமங்களை இனங்காணுதல் அளவிடல் மற்றும் சமர்ப்பித்தல் மேவுகை செய்தல் தேவைப்பாடு தொடர்பில் கவனம் செலுத்துகின்றது. இணக்கப்பாடு காணப்படாத சந்தர்ப்பத்தில் இணக்கப்பாடின்மைக்கான காரணத்தை அடிப்படையாக வைத்து பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. முக்கியமாக அங்கீகாரம் மற்றும் அளவீட்டு சிக்கல்கள் மற்றும் குறிப்பிடத்தக்க வெளிப்படுத்தல் மற்றும் முன்வைப்புக்களிலுள்ள சிக்கல்கள் தொடர்பான இணக்கமின்மைகளில் கவனம் செலுத்துகிறது. நியமங்களுடன் குறிப்பிடத்தக்க இணக்கமின்மை தொடர்பாக கவனம் செலுத்துவதற்கு கூடிய காரணமொன்று காணப்படாத பட்சத்தில், அத்தகைய நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குவதாகக் கருதப்படும். நிதிக் கூற்றுக்கள் பொருன்மையானதாக இருந்தும் சட்டப்பூர்வ விதிகளைப் பயன்படுத்துவதற்கு தேவையற்ற சிக்கல்கள் கண்டறியப்பட்டால், அத்தகைய நிதிக்கூற்றுக்கள் எதிர்காலத்தில் இணக்கத்தை மேம்படுத்த அறிவிப்புக் கடிதம் வடிவில் அந்தந்த குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களுக்குத் தெரிவிக்கப்படுவதோடு அவை சீராக்கங்களுடன் இணங்குவதாகக் கருதப்படும். நியமங்களிலிருந்து விலகல் காரணமாக நிதி நிலைமைகளிலும் நிதித் தொழிற்பாட்டிலும் கணிசமான மாற்றத்தினை ஏற்படுத்தும் சந்தர்ப்பத்தில், அடுத்து வெளியிடப்படுகின்ற நிதிக்கூற்றில் தேவையான திருத்தங்களைச் செய்வதற்காக சம்பந்தப்பட்ட குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களிடமிருந்து அதற்கான மாற்று நடவடிக்கைகள் கோரப்படுகின்றன.

விலகல்கள் சட்ட நடவடிக்கைகளை மீறப்பட்டிருப்பினும், குறித்த மீறல்கள் பாரதூரமானதாக கருதப்படாத சந்தர்ப்பத்தில், சபையினால் வழிகாட்டலொன்று வழங்கப்படும். எனினும், இவ்வாறான விலகல்கள் காரணமாக நிதிக்கூற்றுகள் தவறாகும் பட்சத்தில், சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

3.2 நிதிக்கூற்றுக்கள் மீளாய்வின் முக்கிய விடயங்கள்

2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு, 1995 இன் 15 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் அவதானிக்க வேண்டிய நியதிகளை பூர்த்தி செய்துள்ள குறித்துரைக்கப்பட்ட வியாபார முயற்சிகள் என அழைக்கப்படும் 1,680 நிறுவனங்கள் SLAASMB இனால் இனங்காணப்பட்டுள்ளது.

சில குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களால், முன்னைய ஆண்டுகளுக்குரியதாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்திருந்த காரணத்தினால் இவ்வாண்டில் 1517 குறித்துரைக்கப்பட்ட வியாபார முயற்சிகளால் 1,830 நிதிக்கூற்றுத் தொகுதிகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

ஒப்பீட்டு ரீதியில் கருத்திற் கொள்ளும் போது முன்னைய ஆண்டுகளில் 1,194 குறித்துரைக்கப்பட்ட வியாபார முயற்சிகளால் 1,232 நிதிக்கூற்றுத் தொகுதிகள் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின்

2021 ஆண்டின் செயற்பாடுகளின் மீளாய்வு

கண்காணிப்பு சபைக்கு (SLAASMB) சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

ஐந்து தொழில்நுட்பப் பதவிகள் வெற்றிடங்களாக இருந்த போதும் ஆண்டில் மீளாய்வு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த 550 நிதிக்கூற்றுத் தொகுதிகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபையினால் (SLAASMB) 525 குறித்துரைக்கப்பட்ட வியாபார முயற்சிகளுக்குரிய 552 நிதிக்கூற்றுக்கள் மீளாய்வுகள் பூர்த்தி செய்யப்பட்டன.

இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் கண்காணிப்பு சபையினால் (SLAASMB) 2020 ஆம் ஆண்டில் 694 குறித்துரைக்கப்பட்ட வியாபார முயற்சிகளுக்குரிய 732 நிதிக்கூற்றுத் தொகுதிகள் மீளாய்வுகள் செய்யப்பட்டன.

மீளாய்வாண்டில் மொத்த குறித்துரைக்கப்பட்ட வியாபார முயற்சிகளில் 48% ஒழுங்குபடுத்தப்பட்ட நிறுவனங்கள் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டன.

2020 ஆம் ஆண்டில் மேவுகை செய்யப்பட்ட 24% இற்கு ஒப்பாக 32% கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களாகும்.

நிதிக்கூற்றுக்களை மீளாய்வுளுக்குரிய 552 நிதிக்கூற்றுக்கள் மீளாய்வுகள் பூர்த்தி செய்யப்பட்டன. பணிப்பாளர் பதவி மற்றும் இரண்டு உதவிப் ஆண்டு முழுவதும் உள்ளன.

SLAASMB இல் பணிபுரியும் திறமையான பட்டயக் கணக்காளர்களுக்கான ஆட்சேர்ப்பு மற்றும் சம்பள அளவுத்திட்டங்கள் தொடர்பான சிக்கல்களைத் தீர்ப்பதற்கு நிதி அமைச்சு முயற்சிக்காமையினால் 2019 ஆம் ஆண்டு முதல் தொழில்நுட்ப இதற்கு மேலதிகமாக, ஏப்ரல் 2019 முதல் வெற்றிடமாக இருந்த பணிப்பாளர் நாயக பதவியின் கடமைகளை ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ஒரு பிரதிப் பணிப்பாளர் நாயகத்தினால் கடமை மேற்கொள்ளப்படும் அடிப்படையில் பணியாற்றுவதோடு SLAASMB ஆனது ஆண்டு இறுதியில் நிதிச் செயல்பாட்டு அறிக்கை மதிப்பாய்வுகள் மற்றும் கணக்காய்வுகளை மேற்கொள்வதற்கு 9 கணக்காய்வு உத்தியோகத்தர்களை மட்டுமே கொண்டிருந்தது. இதன் காரணமாக இரண்டு பிரதிப் பொது முகாமையாளர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட கடமைகளுக்கு மேலதிகமாக செயற்பாடுகளைக் கண்காணிக்கும் பணிகளிலும் ஈடுபட்டுள்ளனரசட்டத்தின் கீழ் வேண்டுமென கட்டளை விதிகளுக்கு இணங்கும் குறித்த வருடத்தினுள், 1194 1,232 துடன், அவற்றில் சில நிதிக்கூற்றுக்கள் இருந்தன.

குறித்த வருடத்தினுள், ஏனைய கணக்காய்வுக் கட்டுப்பாட்டாளர்களினால் ஏற்றுக்கொள்ளப்படும் 2016 இல் உலகளாவிய நடைமுறைகளுடன் ஒருங்கிணைக்கப்பட்ட கணக்காய்வு கண்காணிப்பிற்கான அணுகுமுறையை SLAASMB தொடர்ந்தும் பயன்படுத்தியது. கணக்காய்வின் போது ஆபத்து மிகுந்த பிரிவுகளை இனங்காணுவதைக் கொண்டு ஆரம்பமாகும் குறித்த அணுகுமுறையானது, பாரதூரமான பிரிவுகள் தொடர்பில் ஆழ்ந்த ஆய்வுகளை நடாத்தி வருகின்றது, இதன் விளைவாக கணக்காய்வுகளின் போது கணக்காய்வு நியமங்களில் ஏற்பட்டிருக்கும் விலகல்களை இனங்காண முடிந்துள்ளது.

மேற்குறித்த அணுகுமுறையின் சுபாவத்தின் காரணமாகவும் கணக்காய்வின் கண்டுபிடிப்புக்கள் தொடர்பாக நிறுவனங்களுக்கு விபரமாக அறிக்கையிடுவதன் காரணமாகவும், 2016 இன் அணுகுமுறைக்கு முன்னைய அணுகுமுறைகளுடன் ஒப்பிடும் போது வழமையான கண்காணிப்பின் முடிவுக்கு கணிசமான நேரம் எடுத்துக்கொள்ளப்படுகிறது.

மேற் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அணுகுமுறையானது தரமான கணக்காய்வு சூழலை ஏற்படுத்தும் நோக்கில் கணக்காய்வை மேற்கொள்ளும் போது அதிக நேரம் எடுப்பதால் பதவியணியினருக்கு நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்ய கிடைக்கும் நேரம் வரையறுக்கப்பட்டதாக காணப்படுகிறது.

தரமான கணக்காய்வானது நிதிக்கூற்றுக்களில் தவறான கூற்றுகளின் அபாயத்தை குறைப்பதால், மற்ற நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு சுழற்சியான அடிப்படையில் முடிக்கப்படும் வேளையில் வருடாந்த அடிப்படையில் மீளாய்வு செய்யப்படும் அதிக பாரதூரமான பகுதிகளின் மீது நிதிக்கூற்றுக்களின் மீளாய்வுகளை தெரிவு செய்தலில் கவனம் செலுத்தியது.

SLAASMB இல் பணிபுரியும் திறமையான பட்டயக் கணக்காளர்களுக்கான ஆட்சேர்ப்பு மற்றும் சம்பள அளவுத்திட்டங்கள் தொடர்பான சிக்கல்களைத் தீர்ப்பதற்கு நிதி அமைச்சு முயற்சிக்காமையினால் 2019 ஆம் ஆண்டு முதல் தொழில்நுட்ப பணிப்பாளர் பதவி மற்றும் இரண்டு உதவிப் தொழில்நுட்பப் பணிப்பாளர் பதவிகள் ஆண்டு முழுவதும் வெற்றிடமாக உள்ளன.

இதற்கு மேலதிகமாக, ஏப்ரல் 2019 முதல் வெற்றிடமாக இருந்த பணிப்பாளர் நாயக பதவியின் கடமைகளை ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ஒரு பிரதிப் பணிப்பாளர் நாயகத்தினால் கடமை மேற்கொள்ளப்படும் அடிப்படையில் பணியாற்றுவதோடு SLAASMB ஆனது ஆண்டு இறுதியில் நிதிச் செயல்பாட்டு அறிக்கை மதிப்பாய்வுகள் மற்றும் கணக்காய்வுகளை மேற்கொள்வதற்கு 9 கணக்காய்வு உத்தியோகத்தர்களை மட்டுமே கொண்டிருந்தது.

இதன் காரணமாக இரண்டு பிரதிப் பொது முகாமையாளர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட கடமைகளுக்கு மேலதிகமாக செயற்பாடுகளைக் கண்காணிக்கும் பணிகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

ஆபத்து மிகுந்த, பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களின் இணக்கப்பாட்டு நிலையை மேம்படுத்தும் நோக்கில் அபாயம் மிகுந்த குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்வதில் கவனம் செலுத்துவதிலேயே SLAASMB ஆண்டினை ஆரம்பித்தது.

2021 ஆண்டின் செயற்பாடுகளின் மீளாய்வு

இருப்பினும், முந்தைய பிரிவில் விவரிக்கப்பட்டுள்ள கொவிட் 19 கட்டுப்பாட்டு நடவடிக்கைகளால் ஏற்பட்ட அணுகல் கட்டுப்பாடுகளின் விளைவாக, SLAASMB அதிக எண்ணிக்கையிலான தனியார் துறையின் குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களை உள்ளடக்குவதில் கவனம் செலுத்தியது.

இதன் விளைவாக, அண்ணளவாக 55% தனியார் நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தியதோடு 45% மதிப்பாய்வுகள் ஒழுங்குபடுத்தப்பட்ட நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தியது.

குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களின் கலவையில் இந்த மாற்றமானது, திட்டமிடப்பட்ட 3-5 வருட கால எல்லைக்குள் தனியார் நிறுவனங்களின் செயல்படுத்தப்பட்ட கூற்றுக்களை மீளாய்வு செய்ய ஏதுவாக அமைந்தது.

நிதிக் கூற்றுக்களின் மீளாய்வினை மிகவும் செயற்திறனாக மேவுகை செய்வதற்காக வசதிகளை வழங்குதற்காக உலகில் சிறந்த பாவனையுடன் வரிசைப்படுத்துவதற்காக 2021 ஆம் ஆண்டு இலங்கையின் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் குழுவினால் தொடர்பு கொள்ளப்பட்ட ஐக்கிய இராச்சிய ஆலோசகரினால் செய்யப்பட்ட பல முக்கிய பரிந்துரைகளை பின்பற்றியதன் விளைவாக பரிசோதனை சரிபார்ப்பு மீளாயவிற்காக நிதிக் கூற்றுக்கைகளைத் தேர்ந்தெடுப்பதில் ஒரு கலவையான வடிவத்தைப் பின்பற்றி சபை மீளாய்வுகளை நடத்தியது.

இந்த செயல்முறை ஆபத்து அடிப்படையிலான அணுகுமுறைகள், சீரற்ற மற்றும் மாற்று அணுகுமுறைகளின் கலவையாகும்.

ஆபத்து அடிப்படையிலான அணுகுமுறையின் கீழ், தொழில் சார்ந்த இடர் அளவுகோல்களின் அடிப்படையில் முன்னரே தீர்மானிக்கப்பட்ட கருப்பொருள்களில் மீளாய்வுகள் நடத்தப்பட்டன. மேற்கூறிய அறிக்கைகளைத் தேர்ந்தெடுப்பதில், அதிக ஆபத்துள்ள நிறுவனங்களைத் தேர்ந்தெடுப்பதைத் தீர்மானிப்பதில் நிறுவனங்களின் பொதுப் பொறுப்புக்கூறலும் கவனத்தில் கொள்ளப்பட்டது.

இலங்கையின் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் குழுவினால் பின்வரும் துறைகள் தொடர்பாக கவனம் செலுத்தி மீளாய்வு செய்யப்பட்டன.

- வங்கியால் ஆபத்துக்களை வெளிப்படுத்துதல்
- காப்புறுதியால் இ. 4 காப்புறுதி உடன்படிக்கைகளில் வெளிப்படுத்துதல்
- ஆதனங்கள் விற்பனை நிறுவனங்களால் நியாயமான பெறுமதியை அளவிடல் உரிய வெளிப்படுத்தல்களை மேற்கொள்ளல்.
- ஹொட்டெல் துறைக்கு கொவிட் 19 இன் தாக்கம் காரணமாக தொடர்ச்சியாக பேணிச்செல்வது தொடர்பில் காணப்படும் வெளிப்படுத்தல்கள்

நியமங்களில் குறித்துரைக்கப்பட்ட துறைகளில் கூடுதலான கவனத்தை செலுத்துவதற்கு பதவியணியினருக்கு முடியுமான புதிய அணுகுமுறை உயர் தரமான நிறுவன அறிக்கையிடலுக்காக தேவையான முக்கியமான பிரிவுகளை இனங்காண்பதற்கு வழிகாட்டியது.

அதன் பெறுபேறாக பூர்த்தி செய்யப்பட்ட மீளாய்வுகளில் 48% ஒழுங்குபடுத்தப்பட்ட நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதுடன் அண்மித்த வகையில் 52% தனியார் நிறுவனங்களைப் பிரதிநதித்துவப்படுத்தின.

மீளாய்வு செய்யப்பட்ட குறித்துரைக்கப்பட்ட முயற்சிகளின் இந்த உள்ளடக்கம் மூலம் திட்டமிடப்பட்டிருந்த 3-5 ஆண்டு காலப்பகுதியை மேவுகை செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட தனியார் நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களை இலகுவாக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
2019 ஆம் முதல் மூன்று தொழிநுட்ப பதவிகள் வெற்றிடங்களாக இருந்தமை மற்றம் ஆண்டில் தொழில்நுட்ப பணிப்பாளர் பதவி விலகல் காரணமாக இலங்கையின் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சபையின் பணிப்பாளர் தொழில்நுட்ப பதவிகள் இரண்டும் உதவிப்பணிப்பாளர் தொழில்நுட்ப பதவிகள் இரண்டும் ஆண்டு பூராகவும் வெற்றிடங்கள் நிலவின.

2021 ஆம் ஆண்டில் இலங்கையின் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சபையில் சேவையில் ஈடுபட்டிருந்த பிரபல பட்டயக் கணக்காளர்களை ஆட்சேர்த்தல் மற்றும் சம்பளங்களை தீர்மானிப்பது தொர்பான சிக்கல்களை வெற்றிகரமாக தீர்த்து வைப்பதற்கு நிதி அமைச்சிற்கு முடியாதிருந்தமையால் மேற்குறித்த பதவிகள் வெற்றிடங்களாக இருந்தன.

2020 இன் இறுதிக் காலாண்டில் ஒரு பிரதி பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர் நாயகமாக பதவி உயர்வு பெற்றவுடன் ஒட்டுமொத்தமாக ஆண்டின் இறுதி வரை தொழில்நுட்ப பதவிகள் ஐந்தும் வெற்றிடங்களாக இருந்தன.

அதன் பிரகாரம் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபையின் நிதிக்கூற்றுக்கள் மீளாய்வு உட்பட கணக்காய்வு பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக ஆண்டின் இறுதி வரை பரிசோதனை பதவியணியினர் 08 பேர் மாத்திரம் காணப்பட்டதுடன் அதன் விளைவாக நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்தல் மற்றும் கணக்காய்வுப் பரிசோதனைகளின் எண்ணிக்கை குறைவடைந்தன.

2021 ஆண்டின் செயற்பாடுகளின் மீளாய்வு

3.3 சபையின் செயலாற்றல் புள்ளிவிபரங்கள்

	2018	2019	2020	2021
1. வியாபார் முயற்சிகளின் எண்ணிக்கை (காலப்பகுதி இறுதியில்)	1,579	1,608	1,657	1,680
2. கிடைக்கப் பெற்ற நிதிக்கூற்றுக்கள்				
நிதிக்கூற்றுக்களின் எண்ணிக்கை (பல வருட கூற்றுகள் உட்பட)	1,567	1,635	1,232	1,830
குறி. வியா. முயற்சிகளின் எண்ணிக்கை	1,457	1,521	1,194	1,517
3. நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு				
மீளாய்வுகளின் எண்ணிக்கை	638	720	732	552
குறி. வியா. முயற்சிகளின் எண்ணிக்கை	608	699	694	525
4. மீளாய்வு கண்டுபிடிப்புக்கள்				
4.1 **இணக்கங்கள்**				
நிதிக்கூற்றுக்களின் எண்ணிக்கை	430	450	437	312
குறி. வியா முயற்சிகளின் எண்ணிக்கை *	413	440	421	301
4.2 **அவதானிப்புகளுடனான இணக்கங்கள்**				
நிதிக்கூற்றுக்களின் எண்ணிக்கை	202	267	293	237
குறி. வியா முயற்சிகளின் எண்ணிக்கை *	193	256	274	226
4.3 **இணக்கமின்மைகள்** (பணிகள், வழிகாட்டல்கள், எச்சரிக்கைகள்)				
நிதிக்கூற்றுக்களின் எண்ணிக்கை	6	3	2	3
குறி. வியா முயற்சிகளின் எண்ணிக்கை *	6	3	2	3
5. நிதிக்கூற்றுக்களில் கண்டுபிடிப்புகள்				
மீளாய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களின் %				
இணக்கங்கள்	67%	62%	59%	56%
அவதானிப்புகளுடனான இணக்கங்கள்	32%	37%	40%	43%
	99%	99%	99%	99%
இணக்கமின்மைகள் (பணப்பொறுப்புகள், வழிகாட்டல்கள், எச்சரிக்கைகள்)	1%	1%	1%	1%

* பல ஆண்டு மீளாய்வுகள் தவிர

மீளாய்வாண்டில் மீளாய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்ககளில் 1% இணக்கமில்லாததாக 2021 ஆம் ஆண்டின் மீளாய்வு கண்டுபிடிப்புக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டது. மீளாய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்ககளில் 56% இணக்கமாக இருப்பதையும், நிதிக் கூற்றுக்களில் 43% உதவிக் கடிதங்கள் மூலம் தெரிவிக்கப்பட்ட அவதானிப்புக்களுடன் இணக்கமாக இருப்பதையும் இது காட்டுகிறது.

ஆண்டின் போது மதியுரையாளரால் பரிந்துரைக்கப்பட்ட மாற்றப்பட்ட அணுகுமுறையொன்றின் விளைவாக மேற்கொள்ளப்பட்ட கேந்திரமான மீளாய்வுகளில் கண்டறியப்பட்ட கண்டுபிடிப்புக்கள் காரணமாக உதவி கடிதங்கள் மூலம் தொடர்பு கொள்ளப்பட்ட அவ்வாறான கண்டுபிடிப்புக்கள் அதிகரிப்பதற்கு காரணமாக இருந்தது.

நிதி நிலைமை மற்றும் நிதி செயலாற்றல் கருத்திற்கொள்ளக் கூடியவில் மாற்றப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களில் உரிய நியதிகளுக்கு பொருண்மையான விலகல்கள் மூன்று குறித்துரைக்கப்பட்ட முயற்சிகளில் இனங்காணப்பட்ட. அதன் பிரகாரம் அடுத்த காலப்பகுதியில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போதுமம் சமர்ப்பிக்கும் போதும் சீராக்கங்களை மேற்கொள்வதற்காக அவ்வாறான குறித்துரைக்கப்பட்ட வியாபார முயற்சிகளிடமிருந்து பொறுப்புடன் சீராக்கம் செய்யும் நடைமுறைகள் பெறப்பட்டன. மேற்படி இரண்டு குறித்துரைக்கப்பட்ட முயற்சிகளின் தேறிய சொத்துக்கள் ரூபா 733 மில்லியன் காண்பிக்கப்பட்டதுடன் ஏனைய குறித்துரைக்கப்பட்ட முயற்சிகளின் தாக்கம் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை.

சட்டரீதியான நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தி நடைமுறைகளைப் பயன்படுத்துவதற்கு தேவையற்ற மட்டத்தில் இலங்கை கணக்கீட்டு நியமங்களிலிருந்து விலகியிருந்தமை வெளிப்படுத்தப்பட்டதுடன் அது தொடர்பாக விரிவாக பரிசோதனையொன்று மேற்கொள்ளாமல் அவதானிப்புக் கடிதங்கள் மூலம் குறித்துரைக்கப்பட்ட வியாபார முயற்சிகளுக்கு அது தொடர்பாக அறிவிக்கப்பட்டது. ஆதலால் குறித்துரைக்கப்பட்ட வியாபார முயற்சிகளுக்கு தேவையான

2021 ஆண்டின் செயற்பாடுகளின் மீளாய்வு

சந்தர்ப்பங்களில் தம்மால் இணக்கப்பாட்டை மேம்படுத்த முடியுமாக உள்ளது. ஆண்டில் 237 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக அவதானிப்புக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

2021 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்கள் மீளாய்வு தொடர்பாக கண்டுபிடிப்புக்கள் தொடர்பான விபரங்களுக்காக 23-27 ஆம் பக்கம் மற்றும் 2021 ஆம் ஆண்டில் பெற்றுக்கொண்ட பொறுப்பேற்றல்களுக்கு 28 ஆம் பக்கத்தை பார்க்க)

4. கணக்காய்வுப் பரிசோதனை

முன்னைய ஆண்டில் பரீட்சிக்கப்பட்ட 7 கம்பனிகளால் மேற்கொள்ளப்பட்ட 27 கணக்காய்வுகளுடன் ஒப்பிடும் போது இவ்வாண்டில் 17 பட்டயக் கணக்காளர் நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த 34 கணக்காய்வுகள் பரீட்சிக்கப்பட்டன, 2021 ஆம் ஆண்டில் கணக்காய்வுப் பரிசோதனைகள் உரிய நேரத்தில் மேற்கொள்வதற்கு திட்டமிட்ட காரணத்தினால் ஆண்டின் போது முகங்கொடுப்பதற்கு நேர்ந்த நாட்டை மூடிவிடும் செயற்பாட்டின் மத்தியிலும் தடையின்றி பரிசோதனைகளை நடாத்திச் செல்வதற்கு பதவியணியினருக்கு முடியுமாக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது இதன் மூலம் கூடுதலான கணக்காய்வுப் பரிசோதனைகளை மெற்கொள்ள முடியுமாக இருந்தது. இலத்திரனியல் முறையில் கிடைத்த வேலைப்பத்திரத்துடன் கூடிய மாதிரியின் அனைத்து கணக்காய்வுகள் நிகழ்நிலை மூலம் பரீட்சிக்கப்பட்டது. வேலைப்பத்திரங்கள் பௌதீக தன்மையில் இருந்ததன் காரணமாக பௌதீக ரீதியாக பரீட்சிக்கப்பட்ட கணக்காய்வு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது இவ்வாண்டில் 7 நிறுவனங்களின் மூலம் 33 கணக்காய்வு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

வருடத்தினுள் உள்ளக பதவி உயர்வுகள் மற்றும் பதவி விலகல் காரணமாக பரிசோதனையில் ஈடுபட்டிருந்த தொழிநுட்ப பதவியணியினர் தொடர்பில் நான்கு பதவி வெற்றிஎண்ணிக்கை பரீட்சிக்கப்பட்ட கணக்காய்வுகளில் 20% இனை விட குறைவான அளவில் இருந்தது.

கருப்பொருள் கணக்காய்வுகளை மேற்கொள்ளும் போது சமூக இடைவெளி பேணப்படுவதன் அவசியம் மற்றும் நேரடியாக தொடர்பு கொள்வதற்கான அணுகல் கட்டுப்பாடுகள் காரணமாக, ஆண்டில் கருப்பொருள் சார்ந்த கணக்காய்வுகளை மேற்கொள்வதற்கு இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபை திட்டமிடவில்லை. எனினும் ஆண்டில் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபையால் 2019 இல் நடத்தப்பட்ட கருப்பொருள் சார்ந்த கணக்காய்வுகளுடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டில் கருப்பொருள் சார்ந்த கணக்காய்வுகள் நடாத்தப்படவில்லை. இருப்பினும், SLAASMB ஆண்டில் 2018 இல் நடத்தப்பட்ட கருப்பொருள் சார்ந்த கணக்காய்வு பரிசோதனைகளின் கண்டுபிடிப்புக்கள் மற்றும் அறிக்கை யை வெளியிடும் செயற்பாட்டிற்காக பதவியணியினரின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைக் கண்டுபிடிப்புக்கள் மூலம் பரீட்சிக்கப்பட்ட கணக்காய்வுகளில் 62% இணக்கமாகவும் கணக்காய்வுகளில் 35% சட்டத்தின் கீழ் மேலதிக நடைமுறைகளை எடுப்பதற்கும் தேவையற்ற கண்டுபிடிப்புக்கள் உள்ளதாக வெளிப்படுத்தப்பட்டது. இந்த அவதானிப்புக்கள் உதவிக் கடிதங்கள் மூலம் உரிய கணக்காய்வாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2020 ஆம் ஆண்டில் 3 கம்பனிகளாலும் மேற்கொள்ளப்பட்ட 3 கணக்காய்வுகளுக்கு ஒப்பாக 4 நிறுவனங்களினால் மேற்கொண்ட 4 கணக்காய்வுகளின் குறைபாடுகள் தொடர்பான அவதானிப்புக்கள் அறிவிக்கப்பட்டன் மேலும் கணக்காய்வு வேலைப் பத்திரங்களை வைத்துக்கொள்ளல் தொடர்பாக தேவைப்பாட்டை நிறைவேற்றிக் கொள்வதற்கு தவறியமை மற்றும் கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வினை திட்டமிடல் மற்றும் மேற்கொள்வது தொடர்பாக போதியளவு சான்றுகளை பெற்றுக்கெள்ளவது தொடர்பாக கணகாய்வாளர்களுக்கு எச்சரிக்கை கடிதமொன்று வழங்கப்பட்டதுடன் எதிர்காலத்தில் நியமங்களுக்கு இணங்க செயற்படுமாறு அறிவிக்கப்பட்டது.
(2021 காலப்பகுதியில் கணக்காய்வு பரிசோதனை தொடர்பான பற்றிய விவரங்களுக்காக 29-33 ஆம் பக்கத்தினை பார்க்கவும்)

5. புலனாய்வு

5.1 அடம் கெப்பிட்டல் PLC

2014 மற்றும் 2015 மார்ச் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கம்பனியால் முறையான கணக்கேடுகள் மற்றும் சம்பந்தப்பட்ட அறிக்கைகளை நிறுவனம் பேணிவரத் தவறியமை காரணமாக வரையறுக்கப்பட்ட அடம் கெப்பிட்டல் நிறுவனத்தின் முன்னால் கணக்காய்வாளர் மறுப்பு அபிப்பாயத்தினை தெரிவித்துள்ளதன் விளைவாக, 2016 மார்ச் 31 உடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுகளின் கணக்காய்வின் மீது முனைப்பழியற்ற அபிப்பிராயத்தை தற்போதைய கணக்காய்வாளர் தெரிவித்திருந்தார்.

அத்தோடு குறித்த நிதிக்கூற்றுகளை மீள் கணக்காய்வு செய்யுமாறு சபையினால் நிறுவனத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டதுடன், மீள் கணக்காய்வுக்கான மேலதிக செலவுகளை ஏற்பதற்கு கம்பனி மறுப்புத் தெரிவித்தது. அதைத் தொடர்ந்து, 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கூற்றுக்களைப் பரிசோதித்த போது மேற்படி கணக்காய்வாளர் கணக்காய்வுத் நியமங்களைத் தொடர்ந்து மீறுவதாகவும், SLAASMB ஆல் எழுப்பப்பட்ட விடயங்கள் தொடர்பாக கவனத்திற் கொள்ளவில்லை என்பதும் கண்டறியப்பட்டது. கணக்காய்வாளருக்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்றதன் பேரில், SLAASMB தேவையான ஆதாரங்களை சேகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

6. பொது வியாபார முயற்சிகள் (COPE) தொடர்பான குழுவின் பரிந்துரைகள் மீதான செயற்பாடு

2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் அனைத்து குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களினதும் (SBEs) நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்வதன் மூலம் பொது முயற்சிகள் தொடர்பான

2021 ஆண்டின் செயற்பாடுகளின் மீளாய்வு

செயற்குழுவின் மூலம் வழங்கப்பட்ட இணக்கங்களைத் தொடர்ந்து, இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை (SLAAMB) இணக்கமின்மைகளின் மீதான அவதானிப்புக்களின் தரத்தினை மேம்படுத்தும் ஒரு சிறந்த முறையாக நிதிக்கூற்றுக்களின் மீளாய்வுக்காக அபாயத்தினை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறைக்கு மாறியது. இதனடிப்படையில், இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபை அனைத்து குறித்துரைக்கப்பட்ட வியாபார முயற்சிகளையும் (SBEs) 3-5 வருடங்களில் மீளாய்வு செய்வதற்கு உத்தேசித்துள்ளதுடன், இது முறைப்படுத்தப்பட்ட சகல நிறுவனங்களையும் வருடாந்தம் மீளாய்வு செய்தல், உயர் அபாயத்தினையுடைய தனியார் நிறுவனங்களை 3 வருடங்களுக்கு ஒரு முறை மீளாய்வு செய்தல் மற்றும் குறைந்த அபாயத்தினையுடைய தனியார் நிறுவனங்களை 5 வருடங்களுக்குள் மீளாய்வு செய்தல் என அமைந்திருக்கும் வகையில் அவற்றிள் விருப்பின் பிரகாரம் காணப்படும் வரையறுக்கப்பட்ட வளங்களுடன் அச்செயற்பாடு மேற்கொள்ளப்பட்டது.
உயர் அபாயத்தினையுடைய நிறுவனங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்ட இந்த அணுகுமுறை உலக வங்கியால் கணக்கீடு மற்றும் கணக்காய்வு எனும் தரம் மற்றும் குறியீடுகளின் பின்பற்றுதல் 2015 என்ற அறிக்கை மூலம் ஆசிய அபிவிருத்தி வங்கியாலும் அவர்களின் அறிக்கை மூலமும் முன்மொழியப்பட்டிருந்தது. மேலும் இம்முறைமை 2016 மற்றும் 2021 ஆம் ஆண்டில் பதவியணியினர் இயலளவு அபிவிருத்தி செயற்பாடுகளில் ஈடுபட்ட சர்வதேச ஆலோசகர்களினது உலகலாவிய ரீதியில் பயன்படுத்தப்படும் முறையாகவும் இது இனங்காணப்பட்டுள்ளது.

குறித்துரைக்கப்பட்ட வியாபார முயற்சிகளில் 70% தனியாக பட்டியலிடப்படாத நிறுவனங்களாக இருப்பதால் இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபையால் 2014-2015 முதல் செயற்படுத்தப்பட்ட அனைத்து குறித்துரைக்கப்பட்ட வியாபார முயற்சிகள் மீளாய்விற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தொடர்ச்சியான கவனத்திற்கு தொடர்புபடுத்தப்பட்ட விடயமொன்றான குறித்துரைக்கப்பட்ட வியாபார முயற்சிகளின் நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்வதற்காக இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபையின் வருடாந்த தெரிவு நியதிகளின் பொருத்தப்பாடு தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

7. நியமங்களை தயாரிப்பதற்கான ஒத்துழைப்பு

1995 இன் 15 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் கணக்கீட்டு நியமங்கள் குழு மற்றும் கணக்காய்வு குழு இலங்கையில் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களை பின்பற்றுவது தொடர்பாக இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்திற்கு பரிந்துரைகள் மற்றும் ஒத்துழைப்பினை வழங்குகின்றது.

2021 ஆம் ஆண்டில், மேற்கூறிய இரண்டு குழுக்களினாலும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கு இடையே இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 2021 தொகுதியை வெளியிடல், 2022 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் குறித்த திகதியில் காணப்படும் இலங்கை கீழே கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களை திருத்தம் செய்தல் மற்றும் வர்த்தமானியில் பிரசுரித்தல், அப்பிரசுரங்களை சிங்கள மற்றும் தமிழ் மொழிகளுக்கு மொழி பெயர்ப்புச் செய்தல் வெளிப்பாடு வரைவுகள் மற்றும் கலந்துரையாடல் பத்திரங்களுக்குப் பதிலளித்தல், சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்கள் ' சர்வதேச நியமங்கள் தொடர்பாகவும் சர்வதேச கணக்கீட்டு நியமங்கள் சபை மற்றும் சர்வதேச கணக்காய்வு மற்றும் உத்தரவாத நியமங்கள் சபையால் வழங்கப்பட்ட திருத்தங்கள் தொடர்பாக கலந்துரையடல்களை மேற்கொள்ளல் மற்றம் புதிய திருத்திய நியமங்கள் தொடர்பாக விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்துதல். பொன்ற செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

நியமங்களைத் தயாரிப்பதற்காக நாட்டில் நிதி அறிக்கையிடலுக்கான சட்டகத்தை தயாரிப்பதற்காக இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் செய்யப்படுகின்ற குறித்த பங்களிப்பினை மதிப்பீடு செய்து நியமங்களை தயாரிக்கும் செயற்பாடுகளுக்கு உதவுவதற்காக நிதி அமைச்சினால் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்திற்கு வருடாந்த மானியத் தொகையை வழங்குவதற்கு SLAASMB ஊடாக ஏற்பாடு செய்திருந்தது. கடந்தகால ஏற்பாட்டைத் தொடர்வதன் மூலம், இரண்டு குழுக்களின் பகுதியளவிலான செலவினங்களுக்காக ஓரளவுக்கு நிதியளிப்பதற்காகவும், இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களை அமுல்படுத்துவதற்காகவும், வருடத்தினுள், ளுடுயுயுளுஆடீ ஆல் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்திற்கு 4 மில்லியன் தொகை செலுத்தப்பட்டது. (2021 ஆம் ஆண்டில் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் நியமங்களை தயாரித்தல் தொடர்பான செயற்பாடுகளுக்காக பக்கம் 47-48 ஐ பார்க்கவும்)

8. சர்வதேச தொடர்புகள்

நிதி அறிக்கையிடல், கணக்காய்வு மற்றும் இணக்கப்பாட்டினை கண்காணித்தல் தொடர்பான உலகளாவிய ரீதியிலான அபிவிருத்தியுடன் இணைந்து செயலாற்றும் வகையில் SLAASMB ஆனது பல்வேறு சர்வதேச அமைப்புகளில் உறுப்புரிமையைப் பெற்றுக்கொண்டுள்ளது. இத் தொடர்பானது SLAASMB இற்கு ஏனைய சர்வதேச ஒழுங்குபடுத்துனர்களிடமிருந்து தகவல்களையும் உதவிகளையும் பெறவும் இணைந்த செயற்பாடுகளாக பல ஒழுங்குபடுத்துனர்களுக்கு பயன்படும் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும் வழி அமைத்துள்ளது.

இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை (SLAASMB) பின்வரும் சர்வதேச நிறுவனங்களில் தன் உறுப்புரிமையை பெற்றிருந்தது.

அ)சுயாதீன கணக்காய்வு ஒழுங்குபடுத்துனர்களின் சர்வதேச அமைப்பு (IFIAR) – 2007 ஆம் ஆண்டில் இடம்பெற்ற முதல் கூட்டத்திலிருந்து IFIAR இன் உறுப்புரிமையைப் பெற்றுள்ளது.

ஆ)சர்வதேச கணக்காய்வு மற்றும்

2021 ஆண்டின் செயற்பாடுகளின் மீளாய்வு

சான்றுறுதிப்படுத்தல் நியமங்கள் சபையின் ஆலோசனைக் குழு (IAASB) – 2007 ஆம் ஆண்டு முதல் உறுப்பினராக உள்ளது.

இ) கணக்காளர்களுக்கான சர்வதேச நியமங்களுக்கான ஒழுக்க நியமங்கள் சபையின் (IESBA) மதியுரைக்குழு – 2009 இல் உறுப்பினராக இணைத்துக் கொள்ளப்பட்டது.

இதற்கு மேலதிகமாக இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபையின் (SLAASMB) அங்கத்தவர்கள் இலங்கை நாட்டினை பிரதிநிதித்துவப்படுத்தி ஐக்கிய நாடுகள் சபையினால் வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படுகின்ற கணக்கீடு மற்றும் அறிக்கையிடலின் சர்வதேச நியமங்கள் தொடர்பான அரசாங்கங்களுக்கிடையிலான நிபுணத்துவக் குழுக்களின் (ISAR) அமர்வுகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

உலகலாவிய ரீதியில் தாக்கம் செலுத்திய கொவிட் - 19 தொற்று நிலைமை காரணமாக, சகல கூட்டங்களும் மாநாடுகளும் நேரடியாக நடைபெறுதல் தொடர்பாக எதிர்கொண்ட சவால்களை வெற்றி கொள்ளும் நோக்கில் இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபையின் **(SLAASMB)** பொதுவாக பங்குபற்றும் சர்வதேச கூட்டங்களும் மாநாடுகளும் இந்த ஆண்டில் நிகழ்நிலை ஊடாக தொடர்ந்து நடாத்தப்பட்டன.

இந்த அறிவு விருத்தி செயற்பாடுகளை பயன்பாட்டிற்கு எடுத்து 2021 ஆம் ஆண்டில் ஒரு பதவியணி உறுப்பினர் இரண்டு மதியுரைக் குழுக் கூட்டங்களுக்கு சமூகமளித்ததுடன் ஒரு அங்கத்தவர் சுயாதீன கணக்காய்வு ஒழுங்குபடுத்துனர்களின் சர்வதேச அமைப்பின் கூட்டத்திற்கு சமூகமளித்தார். மேலும் அனைத்து தொழில்நுட்ப பதவியணியினருக்கு 2021 சுயாதீன கணக்காய்வு ஒழுங்குபடுத்துனர்களின் சர்வதேச மாநாட்டின் பரிசோதனை செயலமர்வு, சுயாதீன கணக்காய்வு ஒழுங்குபடுத்துனர்களின் சர்வதேச மாநாட்டின் அமுலாக்கல் செயலமர்வு மற்றும் சாதாரண சூழ்நிலைகளில் சுயாதீன கணக்காய்வு ஒழுங்குபடுத்துனர்களின் சர்வதேச மாநாட்டின் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல் உருப்படியாக காணப்படும் உலக பொது மக்கள் கொள்கை குழுவின் உறுப்பினர்களான கணக்காய்வு நிறுவனங்களின் அமைப்புக்களுடனும் நிகழ்நிலை ஊடாக பங்குபற்ற சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டன.

சுயாதீன கணக்காய்வு ஒழுங்குபடுத்துனர்களின் சர்வதேச அமைப்பினால் நடாத்தப்படுகின்ற செயலமர்வுகளுக்காக சுயாதீன கணக்காய்வு ஒழுங்குபடுத்துனர்கள் பங்குபற்றுவதால் இக்கூட்டங்கள் மற்றும் கருத்தரங்குகள் இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபைக்காக (SLAASMB) தகவல்கள் பரிமாற்றும் மேடையாக உள்ளது.

இந்த உலகலாவிய கருத்தரங்கிற்காக சமூகமளிக்கும் இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபையின் (SLAASMB) இயலளவைக் கட்டியெழுப்புவதற்கு கடந்த காலத்திலும் முக்கியமானதாக இருந்ததுடன் இங்கு கூட்டங்கள், பரிசோதனைகள், செயலமர்வுகள் மற்றும் கணக்காய்வு ஒழுங்குபடுத்தலுக்கு சமூகமளிப்பதற்கும் உலகம் பூராகவும் உள்ள ஏனைய கணக்காய்வு ஒழுங்குபடுத்துனர்களுடன் கலந்துரையாடுவதற்கும் வலையமைப்பினை ஏற்படுத்தவும் இயலுமை கிடைத்துள்ளது. உலகில் சிறந்த பயன்பாடு தொடர்பான ஆய்வுசெய்தல் இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபையினால் (SLAASMB) நாட்டில் உள்ள சூழலைப் பாதுகாப்பதற்காக அதன் நியதிகள் பொறிமுறைகளை மாற்றுவதற்கு முடியுமாக இருந்தது. அவ்வாறே இவ்வலையமைப்பு பொறிமுறை ஊடாக இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபைக்கு (SLAASMB) நிதி அறிக்கையிடல் மற்றும் ஒழுங்குபடுத்தல் துறையின் பிரபல்யமானவர்களை மதியுரையாளராக இனங்காண்பதற்கு முடியுமாக இருந்ததுடன் அதன மூலம் அண்மித்த ஆபத்து அடிப்படையிலான புறம்பான மாற்று அணுகுமுறையுடன் நிதி அறிக்கையிடல் மிகவும் பொருத்தமான மேவுகை செய்யக்கூடியதாக இருந்தது.

9. மனித வளங்கள்

9.1 பதவியணியினர்

2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை (SLAASMB) இன் பதவியணியில் 17 பேர் காணப்பட்டதுடன் அதில் பத்துப்பேர் பட்டயக் கணக்காளர்களாக இருந்தனர். மொத்த தொழில்நுட்ப பணிக்குழுவானது பணிப்பாளர் நாயகம், பிரதி பணிப்பாளர் நாயகம், நான்கு பணிப்பாளர்கள் மற்றும் நான்கு உதவி பணிப்பாளர்களையும் உள்ளடக்கியிருந்தது. தொழில்நுட்ப பணிக்குழுவில் மூன்பேர் கடந்த காலப்பகுதியில் நிதி அமைச்சினால் வசதிகள் வழங்கப்பட்ட பிரகாரம் ஒப்பந்த அடிப்படையில் பணியில் அமர்த்தப்பட்டிருந்ததுடன் ஏழு பேர் நிரந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

பணிப்பாளர் நாயகமாக பதவி உயர்வு பெற்றதன் காரணமாக 2020 இன் இறுதிக் காலாண்டில் வெற்றிடமான பிரதி பணிப்பாளர் நாயகம் பதவி, 2019 சனவரி மாதத்திலிருந்து வெற்றிடமான பணிப்பாளர் தொழில்நுட்ப பதவி, 2019 ஆம் ஆண்டின் இறுதியில் வெற்றிடமான இரண்டு உதவிப் பணிப்பாளர் பதவிகள் உட்பட தொழில்நுட்ப பதவிகள் ஐந்து 2021 ஆம் ஆண்டு பூராகவும் வெற்றிடங்களாக இருந்தன. அமைச்சு சுற்றறிக்கையின் பிரகாரம் குறித்த சம்பள அளவின் பிரகாரம் கூடிய அனுபவம், தொழில்நுட்ப ரீதியில் சிறந்த பட்டயக் கணக்காளர்களை கவர்ந்து கொள்வதற்கு இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை (SLAASMB) இற்கு முடியாதிருந்தமை இதற்கான காரணமாகும். எவ்வாறாயினும் சபை அமைச்சுடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் பெறுபேறாக இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபைக்கு (SLAASMB) துறைசார் சிறந்த கணக்காளர்களை கவருதற்காக சம்பளம் வழங்குவதற்கு 2021 யூன் மாதத்தின் போது அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் அப்பதவிகளுக்காக 2021 ஆகஸ்ட் மாதத்தின் போது திருத்திய

2021 ஆண்டின் செயற்பாடுகளின் மீளாய்வு

ஆட்சேர்ப்பு நடைமுறை (SoR) சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் ஒழுங்குபடுத்தல் மேவுகையை மேம்படுத்தும் பொருட்டு மேலே குறிப்பிட்ட துறைசார் பதவிகளை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுப்பதற்காக இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை (SLAASMB) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் இணக்கப்பாட்டை எதிர்பார்த்துள்ளது.

இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபையால் (SLAASMB) ஆண்டில் குறித்தரைக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையை பின்பற்றி 2018 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட நிதி மற்றும் நிர்வாக நிறைவேற்று உத்தியோகத்தர் பதவி நிரப்பப்பட்டு அது உள்ளக பதவி உயர்வொன்று மூலம் மேற்கொள்ளப்பட்டது. இதற்கு மேலதிகமாக செயலாளர் பதவியும் ஆண்டின் இறுதி காலாண்டின் போது நிரப்பப்பட்டது. எனினும் ஆண்டின் இறுதியில் தற்போதைய பதவியணியில் 5 நிறைவேற்று தர உத்தியோகத்தர்கள் காணப்படுகின்றனர். இது 2018 புதிய பதவியணி அங்கீகாரத்திலிருந்து நிரப்புவதற்கு இருந்த 7 நிறைவேற்றுத் தர பதவிகளுக்கு மேலதிமாக வெற்றிடமாக உள்ள பதவிகளாகும். எதிர்பார்க்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மீளாய்வு மற்றும் கணக்காய்வு பரிசோதனை எண்ணிக்கை மேற்கொள்வதை மட்டுப்படுத்தி மீளாய்வு செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள திறமையான தொழில்நுட்ப பதவியணியில் காணப்பட்ட தொடர்ச்சியான பற்றாக்குறை, நிதிக்கூற்றுக்கள் மீளாய்வின் அடிப்படை மீளாய்வு செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக வருடக் கணக்காக வெளிவாரி மீளாய்வு சபையின் சேவைகளை தொடர்ச்சியாக பெற்றுக்கொள்வதற்கு காரணமாக இருந்தது. மேலும் இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபையால் (SLAASMB) பட்டய அங்கீகாரம் பெற்ற கணக்காளரின் சங்கத்தில் பகுதியளவு தகைமை கொண்ட இரண்டு பயிலுனர்கள் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள குழுவிற்கு உதவுவதற்காக பயிலுனர்களாக சேர்க்கப்பட்டனர்.

எவ்வாறாயினும் கடுமையான தொழில்நுட்ப உத்தியோகத்தர் பற்றாக்குறை காரணமாக இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபையின் (SLAASMB) செயற்பாடுகளின் முன்னேற்த்தை மட்டுப்படுத்துவதற்காக அடிப்படையாக தாக்கமளித்துள்ளதுடன் இச்சிக்கல்களை முடியுமான வரை தீர்வுசெய்வதற்கு சபை அனைத்து முயற்சிகளையும் எடுத்துள்ளது. அவ்வாறு செய்யும் போது சபையினால் நிதி அமைச்சினதும் இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபையின் (SLAASMB) வரிசை அமைச்சான பொருளாதார கொள்கை மற்றும் திட்ட செயற்பாட்டு அமைச்சின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களுடன் மேற்படி பதவியணி தொடர்பான சிக்கல்களை கலந்துரையாடியுள்ளதுடன் ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகளை பலப்படுத்துவதற்காக உரிய அமைச்சுக்களின் பொருத்தமான அங்கீகாரத்தை எதிர்பார்த்துள்ளது.

9.2 வெளிக்கள மீளாய்வாளர்களின் குழு

2012 ஆம் ஆண்டில் COPE குழு முன்வைத்த பரிந்துரைகளுக்கிணங்க நடவடிக்கை எடுத்தலின் விளைவாக இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபையால் (SLAASMB) மீளாய்வு செய்யும் நிதிக்கூற்றுகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் முயற்சியில் நிதிக்கூற்றுகளை மீளாய்வு செய்வதற்காக வெளிக்கள மீளாய்வாளர்களின் சேவைகள் தொடர்ந்தும் பெற்றுக்கொண்டது. எனினும் குறித்த ஆண்டில் காணப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட பணியாளர்களை அலுவலகத்துக்கழைத்தல் மற்றும் சமூக இடைவெளி பேணல் போன்ற கட்டுப்பாடுகள் காரணமாக வெளிக்கள மீளாய்வாளர்கள் குழுவிற்கென புதியவர ஒருவர் நியமிக்கப்பட்டதுடன் வெளியக மீளாய்வாளர்களால் மேற்கொள்ளப்படும் மீளாய்வுகளின் தரம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட காலரீதியான மதிப்பீட்டின் பேரில் எந்தவொரு மீளாய்வாளர் ஒருவரும் சேவையிலிருந்து நீக்கப்படவில்லை. அதன் பிரகாரம் இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபையால் (SLAASMB) 16 பேர் வெளியக மீளாய்வாளர்கள் குழுவில் உள்வாங்கப்பட்டிருந்தனர்.

மீளாய்வாளர்களின் செயற்பாட்டின் தரம் தொடர்பாக அவ்வப்போது மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடு, வெளிவாரி மீளாய்வாளர்களினால் நடாத்தப்படும் மீளாய்வுகளின் தரத்தை அதிகரிப்பதற்கு முடியும். மீளாய்வாளர்களால் தேவையான மேம்படுத்தல் மேற்கொள்ள வேண்டிய துறைகள் இனங்காண்பதற்காகவும் தொடர்பு கொள்வதற்கும் இயலுமை அதன் மூலம் உருவாகின்றது.

ஆண்டினுள் நிறைவு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மீளாய்வுகளின் அளவுகளில் 122 நிதிக்கூற்றுத் தொகுதிகள் உள்ளக்கப்படுவதுடன் அதன் ஆரம்ப மீளாய்வு வெளிவாரி மீளாய்வாளர்களால் பூர்த்தி செய்யப்பட்டன. ஆண்டில் வெளிவாரி மீளாய்வாளர்களால் 101 நிதிக் கூற்றுக் தொகுதிகளில் ஆரம்ப மீளாய்வு செய்யப்படடுள்ளதுடன் அவர்களின் சேவைகளுக்காக ரூபா 0.5 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டது. அம்மீளாய்வு இறுதியின் போது கண்டுபிடிப்புக்களின் அடிப்படையில் இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபையின் தொழில்நுட்ப பதவியணியினருக்கு மேலதிக தகவல்களை வழங்குவதற்கும் சீராக்கங்களுக்காக இணக்கப்பாட்டை பெற்றுக்கொள்வதற்கும் அவதானிப்பு கடிதங்களை வழங்குவதற்கு சட்டரீதியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருந்தன.

.

மேலும் குறித்த ஆண்டில் நிறைவு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மீளாய்வுகளில் 430 நிதிக்கூற்றுத் தொகுதிகளின் ஆரம்ப மீளாய்வும் சபையின் பதவியணியினரால் மேற்கொள்ளப்பட்டது.

10. ஆளுகை

சட்டமூலத்தின் பிரகாரம் இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை (SLAASMB) உறுப்பினர் சபையால் நிர்வகிக்கப்படுகின்றது. உத்தியோகபூர்வ ரீதியில் நியமனம் பெறும் 03 உறுப்பினர்களுடனும் இனங்காணப்பட்ட நிறுவனங்களில் இருந்து பெறப்பட்ட வேட்புமனுக்களில் நிதி அமைச்சரால் நியமிக்கப்பட்ட 10 உறுப்பினர்களையும் சபை கொண்டுள்ளது. கம்பனி பதிவாளர் நாயகம், உள்நாட்டு இறைவரி

2021 ஆண்டின் செயற்பாடுகளின் மீளாய்வு

ஆணையாளர் நாயகம் மற்றும் இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ஆகியோர் உத்தியோகபூர்வமாக நியமனம் உறுப்பினர்களாக உள்ளனர். அவ்வாறு நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் இலங்கை மத்திய வங்கி, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம் (3 உறுப்பினர்கள்), ஐக்கிய இராச்சியத்தின் பட்டய முகாமைத்துவ கணக்காளர்களின் இலங்கைப் பிரிவு, இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், இலங்கை வர்த்தக சம்மேளனம், இலங்கை வர்த்தக வாணிப சங்கங்களின் சம்மேளனம், இலங்கை வங்கிகள் சங்கம் மற்றும் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு. ஆகியவற்றிலிருந்து பரிந்துரைக்கப்பட்டவர்கள் ஆவர். உறுப்பினர் ஒருவரின் பதவிக் காலம் நான்கு ஆண்டுகளாகும்.

சட்டவிதிக் கோவையின் பிரகாரம் உள்ளடக்கத்தை பூர்த்தி செய்து 2020 ஆம் ஆண்டில் நியமனம் பெற்ற சபை 2021 ஆண்டிலும் இலங்கை மத்திய வங்கியின் உதவி ஆளுநர் திருமதி கே.எம்.ஏ.என். தவுலகல அவர்களின் தலைமையின் கீழ் செயற்பட்டது.

ஆண்டின் போது, சட்டத்தின் பிரகாரம் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் சபை உறுப்பினர்களான ஏ.குணசேகர, பி.ஆர்.ஏ.ஐ குணரத்ன மற்றும் பி.டி சமரசிங்க ஆகியோர், ஆண்டின் போது சில **SBEs** களின் பணிப்பாளர்களாக அல்லது சிரேஷ்ட உத்தியோகத்தர்களாக பணியாற்றியுள்ளனர். அதேபோன்று, சபையின் உறுப்பினர்களாக இருந்த திரு.எச்.எம்.ஏ.ஜயசிங்க மற்றும் திரு.டபிள்யூ.டபிள்யூ.ஜே.சி.பெரேரா ஆகியோர் சில SBEs களை கணக்காய்வு செய்யும் கணக்காளர்களின் நிறுவனங்களின் பங்காளர்களாகவும், சபையின் உறுப்பினராக இருந்த திரு. எஸ்.எம்.எஸ்.எஸ். பண்டார SBE இன் பணிப்பாளராகவும் சில SBEs ஐ கணக்காய்வு செய்யும் பயிற்சி கணக்காளர்களின் நிறுவனமொன்றின் பங்காளராகவும் காணப்பட்டனர்.

மேலும், அந்தக் காலகட்டத்தில், சபைக்கு அழைக்கப்பட்ட திரு. ரீ.ஜே.எஸ். ராஜகாரியர், சில SBEs ஐ கணக்காய்வு செய்யும் தொழில்துறை கணக்காளர் நிறுவனமொன்றின் பங்காளராகவும் பணியாற்றினார்.

சபையின் சுயாதீனத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு SBE அல்லது அதன் கணக்காய்வாளர்கள் தொடர்பான விடயங்களுக்குரிய அனைத்து ஆவணங்களும் தொடர்புடைய SBE அல்லது அதன் கணக்காய்வாளருடன் தொடர்பினைக் கொண்டுள்ள உறுப்பினர்களுக்கு அனுப்பப்படும் கடிதங்களில் இருந்து அகற்றப்பட்டுள்ளது. அத்தகைய உறுப்பினர்கள் அந்த SBEs இற்குரிய விடயங்கள் தொடர்பான கலந்துரையாடல்களில் பங்கேற்பதில்லை.

நாடு அவ்வப்போது மூடப்பட்டமை மற்றும் தொடர்ச்சியான சுகாதார மற்றும் பாதுகாப்பு தொடர்பான ஆலோசணைகள் ஊடாகவும் சபையினால் கூட்டங்கள் குறித்துரைக்கப்பட்ட பிரகாரம் நிகழ் நிலை கூட்டங்களாக நடாத்தப்பட்டன. அதன் பிரகாரம் ஆண்டில் 14 சபை கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன.

ஆண்டில் சபையின் கலந்துரையாடல்கள் மூலம் ஒட்டுமொத்த செயற்பாட்டுக் குறிகாட்டிகளின் பிரகாரம் பதவியணியிரின் செயலாற்றலை மற்றும் SBEs மற்றும் கணக்காய்வாளர்கள் தொடர்பான குறிப்பிடத்தக்க தொழில்நுட்பச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேவுகை செய்யப்பட்டன. SBEs மற்றும் கணக்காய்வாளர்களால் நியமங்களுடன் இணங்காமை, வருடாந்த நிதிக்கூற்றுக்களை அங்கீகரித்தல், வருடாந்த வரவு செலவுத் திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் ஆகிய விடயங்கள் தொடர்பாக சபை கவனம் செலுத்தியிருந்தது. மேலும் நடைமுறையில் உள்ள கடுமையான பதவியணியினர் பற்றாக்குறையின் போதும் மீளாய்வு பொறிமுறைகளின் வினைத்திறன் மற்றும் செயற்திறனை மேம்படுத்துவதற்கான நிறுவன அறிக்கையிடல் ஒழுங்குபடுத்தல் பரிந்துரைகளை மீளாய்வு செய்வதிலும் சபை ஈடுபட்டுள்ளது. இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபையின் (SLAASMB) ஆக்கபூர்வமாக செயற்பாட்டை மேம்படுத்துவதற்காக முகாமைத்துவ தகவல்களை முறைமையொன்றை திட்டமிடல், அபிவிருத்தி செய்தல் மற்றும் செயற்படுத்துவதற்காக பொருத்தமான அபிவிருத்திக்கு ஈடுபடுத்தும் செயற்பாட்டிலும் சபை ஈடுபட்டுள்ளது.

மேலும், தொழில்நுட்பச் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு பொருத்தமான தொழில்சார் பதவியணியினரை கவருவதற்கு முடியாமை தொடர்பாக காணப்படும் சிக்கலைத் தீர்ப்பதற்கு சபை பாரிய முயற்சியை மேற்கொண்டது. குறித்த முயற்சி மற்றும் திறைசேரி செயலாளரின் முன்மொழிவின் பெறுபேறாக பதவியணியினர் பிரச்சினைகளை தீர்த்துக கொள்வதற்கு சபையினால் முன்மொழிவொன்று முன்வைக்கப்பட்டது. மேலதிகமாக நடாத்தப்பட்ட கூட்டங்கள் மற்றும் சமர்ப்பித்தல்களின் விளைவாக அமைச்சரவையால் 2021 யூன் மாதத்தின் போது இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபைக்காக (SLAASMB) சம்பள அளவொன்று அங்கீகரிக்கப்பட்டது. எனினும் 2021 ஆகஸ்ட் மாதத்தின் போது ஆட்சேர்ப்பு நடைமுறை (SoRs) திருத்தம் செய்யப்பட்டு சபை அங்கு குறிப்பிட்டுள்ள தேவைகளுக்கு பொறுப்பேற்றல் தெரிவித்திருந்த போதும் ஆட்சேர்ப்பு நடைமுறைக்காக இதுவரை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் இணக்கப்பாடு இதுவரை கிடைக்காமை காரணமாக சபைக்கு தொடர்ந்தும் முன்னேற்றமொன்றை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

சபையின் செயற்பாட்டு கொள்கையின் பிரகாரம் தகவல் சேகரித்தல், நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்தல், கணக்காய்வு பரிசோதனைகளை மேற்கொள்ளல், புலனாய்வுகளை நடாத்துதல் மற்றும் பொது விழிப்புணர்வு நடவடிக்கைகளை நடாத்துதல் போன்ற நியமங்களுடன் இணங்குவதைக் கண்காணிப்பது தொடர்பான வழக்கமான செயற்பாடுகள், ஆண்டின் போது பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதி பணிப்பாளர் நாயகம் ஆகியோரின் மேற்பார்வை கீழ் வழிகாட்டலின் கீழ் பதவியணியினரால் மேற்கொள்ளப்பட்டன.

11. நிதிச் செயலாற்றுகை

ஆண்டில் இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபையின் (SLAASMB) பிரதான நிதி மூலமாக அரசினால் வழங்கப்பட்ட நிதி வழங்கள் மூலமாகவே தொடர்ந்தது. இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு

2021 ஆண்டின் செயற்பாடுகளின் மீளாய்வு

சபை (SLAASMB) இன் செயற்பாடுகள் அரசாங்க நிதியின் மூலம் நிதியளிக்கப்பட்டாலும், சபையின் செலவினங்களுக்காக மாற்றுவழியாக, சட்டத்தின் கீழ் கௌரவ நிதி அமைச்சரால் தீர்மானிக்கப்படும் சதவீதமொன்றான செஸ் வரியை குறித்துரைக்கப்பட்ட வியாபார முயற்சிகளிடமிருந்து அறவிடப்பட முடியும். பணத்தை ஈடுபடுத்துதல் எவ்வாறாயினும் இந்த மாற்று வழிக்கு நிதி அமைச்சு விரும்பாததன் காரணமாக 2008 ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் அமுல்படுத்தப்படவிருந்த இவ்வரி அறவிடல் திட்டமானது 2008 ஒக்டோபர் 7 ஆம் திகதி கௌரவ அமைச்சரினால் மீளப் பெறப்பட்டது

இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை (SLAAMB) ரூபா 71,236,691 தொகை செயற்பாட்டு செலவினங்களுக்காக செலவிட்டிருந்தது. அவ்வாண்டில் அலுவலகம் சில வேலைகளில் குறைந்த பதவியணியினருடன் செயற்பட்டதுடன் ஏனைய பதவியணியினர் வீட்டிலிருந்து வேலை செய்யும் முறை ஊடாக ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகளில் ஈடபட்டிருந்தனர். எவ்வாறாயினும் 2021 இன் இறுதி காலாண்டில் கருத்திற் கொள்ள வேண்டிய காலப்பகுதியல் வீட்டிலிருந்தே வேலை செய்யும் நடைமுறையின் கீழ் தொலை வேலை நடைமுறை மற்றும் ரோஸ்டர் அடிப்படையில் அலுவலகத்திற்கு வந்து வேலை செய்வதின் நேரடி பெறுபேறாக 2020 ஆம் ஆண்டில் ரூபா 67,467,943 ஆன செயற்பாட்டுச் செலவினம் 2021 ஆம் ஆண்டின் செயற்பாட்டு செலவினத்தை விட குறைவாக இருந்தது.

ஆண்டு இறுதியில் அலுவலகவளாக குத்தகையை புதுப்பிப்பதன் காரணமாக அலுவலக வளாக வாடகை அதிகரித்தமை இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபையின் (SLAAMB) நிதிக்கூற்றுக்கள் மீளாய்வு பொறிமுறையினதும் பதவியணியினருக்கான பயிற்சிகளின் செயற்திறனை அதிகரிப்பதற்காக வெளிநாட்டு நிபுணர்களின் ஆலோசனையின் காரணமாக பயிற்சி மற்றும் மேம்பாட்டு செலவினங்களில் அதிகரிப்புக்கு வழிவகுத்தது. மேலும், நிதிக்கூற்றுக்கள் மீளாய்வு மற்றும் கணக்காய்வுகளை தொலைதூரத்தில் நடத்துவதற்காக வீட்டிலிருந்து பணிபுரியும் ஊழியர்களுக்கு வழங்கப்படும் இணைய வசதிகளின் விலை தகவல் தொடர்பு செலவினங்கள் மற்றும் வாகன பராமரிப்புக்கான செலவு அதிகரித்துடன் 8 - 11 ஆண்டுகளுக்கும் மேலாகப் பயன்படுத்தப்படும் வாகனங்களின்ப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு செலவும் அதிகரித்துள்ளது.

தொழிற்பாட்டுச் செலவினங்களில் குறைவானது, முக்கியமாக ஊழியர்களின் செலவுகள், வெளி மதிப்பாய்வாளர்களுக்கு வழங்கப்படும் தொழில்முறைக் கட்டணம், சர்வதேசஅங்கத்துவத்திற்கான செலவினங்கள் தொடர்பில் அவதானிக்கப்பட்டன. இரண்டு பதவியணி உறுப்பினர்கள் இராஜினாமா செய்தமை மற்றும் ஆட்சேர்ப்பு ஆண்டின் இறுதியில் மேற்கொண்ட பதவியணியினர் கிரயம் குறைவடைவதற்கு காரணமாக இருந்தது. எனினும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ஆண்டின் செயற்பாட்டு கியத்தில் அதிகரிப்பொன்று ஏற்பட்டமைக்கு வீட்டிலிருந்து வேலை செய்த செயற்பாடு உட்பட இங்கு விபரிக்கப்பட்ட செலவினங்கள் அதிகரித்த காரணத்தினால் இவ்வாண்டில் ஏற்பட்ட செலவினம் குறைவடைந்தது. தொழிற்பாட்டுச் செலவினங்களில் ஆண்டில் பதவியணியினர் கிரயம் ரூபா 35,496,277 ஆக இருந்ததுடன அது முன்னைய ஆண்டின் கிரயமான ரூபா 36,922,897 உடன் ஒப்பிடும் போது 4% ஆன குறைவொன்று காண்பித்தது. மேலும் இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபையின் (SLAAMB) பதவியணியினர் கிரயம் முன்னைய ஆண்டின் தொழிற்பாட்டுச் செலவினங்களில் 55% சதவீதத்தடன் ஒப்பிடும் போது அது 2021 ஆம் ஆண்டின் தொழிற்பாட்டுச் செலவினங்களில் 50% பிரதிநிதித்துவப்படுத்தியது.

12.அபிவிருத்தி திட்டம்

ஒழுங்குபடுத்தும் செயன்முறையை விரிவுபடுத்துவதற்காக ஆண்டின் போது சபையானது மூன்று பாரிய மூலதன தன்மையிலான செயற்பாடுகளை நோக்கி கவனம் செலுத்தியதுடன் அச்செயற்திட்டங்களின் செயன்முன்னேற்றம் விரிவாக கீழே காட்டப்பட்டுள்ளன.

12.1 அலுவலக விரிவாக்கம் சந்தை வாடகை விகிதத்தை மிப்பீடு

செய்யும் விளைவாக தற்போதய அலுவலக வளாகத்தின் குத்தகை ஒப்பந்தத்தை 2021 யூலை மாதத்தின் போது கலந்துரையாடப்பட்ட விலையில் புதுப்பிக்கப்பட்டதுடன் அது முழுமையாக மீண்டும் ஸ்தாபிப்பதனை விட இலாபகரமாகும். 2018 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட ஆளணியில் மேலதிக பணியாளர்களுக்கு தற்போது காணப்படும் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட அலுவலக வளாகத்தின் முதல் தளத்தின் உட்புறப் பகுதிகளாக்கள் செயற்பாடுகள் கட்டாயமானதாகும். குறித்தரைக்கப்பட்ட முயற்சிகள் டற்றும் கணக்காளர்களின் உயர் மேவுகையொன்றை ஒழுங்குபடுத்துவதற்காக இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபைக்கு (SLAAMB) வசதிகளை வழங்குவதற்காக பதவியணியொன்று அத்தியவசியமாக இருப்பதுடன் அதன் மூலம் நாட்டின் நிதி அறிக்கையிடலின் விசுவாசத்தன்மையை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

விரிவான தரைத் திட்டம் மற்றும் 2019 ஆம் ஆண்டின் உட்புறப் பகுதிகளாக்கள் செயற்பாட்டின் நிர்மாணச் செலவின் பகுப்பாய்வின் விளைவாக மற்றும் குத்தகையின் தொடர்ச்சியை ஆண்டு முழுவதும் உறுதி செய்ததன் மூலம், இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை (SLAAMB) ஆண்டின் போது பகுதிகளாக பிரிக்கும் செயற்பாடுகளுக்காக கேள்வியை கோரியது. எவ்வாறாயினும் கேள்வி மதிப்பீட்டின் போது அரசினால் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டின் போது மூலதன செலவுகளை குறைந்தமை காரணமாக வளவினை கொள்வனவு செய்த பின்னர் இரண்டாவது தடவையாக உள்ளக நிர்மாண செயற்பாடுகளை நிறுத்துவதற்கு இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபைக்கு (SLAAMB) நேர்ந்தது. அதன் விளைவாக கேள்விதாரர் ஒருவரை பெற்றுக்கொள்வதற்குரியதாக மேற்கொண்ட செயற்பாட்டிற்காக மற்றும் திட்டமிடப்பட்டுள்ள உள்ளக நிர்மாண செயற்பாடுகளுக்காக

2021 ஆண்டின் செயற்பாடுகளின் மீளாய்வு

மதியுரையாளர்களின் சேவைகளுக்காக ஆண்டினுள் ரூபா 346,679 செலவிடப்பட்டது.

12.2 இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபையின் (SLAAMB) முகாமைத் தகவல் முறைமை அபிவிருத்தி (MIS)

இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபைக்கு (SLAAMB) முகாமைத் தகவல் முறைமையொன்றின் (MIS) தேவைப்பாடு நீண்டகால தேவையாக உள்ளது. எனினும் செயற்திட்ட வழங்கல் கட்டத்தில் இலங்கை தகவல் மற்றும் தொலைதொடர்பு முகவராண்மை (ICTA) முகாமைத்து தகவல் முறைமை செயற்திட்டத்தின் மதியுரையாளராகவும் நிதி வழங்கல் ஆகிய செயற்பாடுகளிலிருந்து விலகிய காரணத்தினால் 2016 ஆம் ஆண்டு முதல் இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபையினால் (SLAAMB) முகாமைத் தகவல் முறைமையை கொள்வனவு செய்வதற்கான முயற்சிகள் கைகூடவில்லை. செயற்திட்டத்தினை மீண்டும் ஆரம்பிப்பதற்காக இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபையினால் (SLAAMB) ஆலோசகரொருவரை ஈடுபடுத்துவதற்கு எடுத்துக் கொண்ட முயற்சியும் வெற்றிபெறிவ்லை.

முகாமைத்துவ தகவல் முறைமையொன்றின் தேவை சபையினால் பிரதான தேவைப்பாடொன்றாக கருதியதால் 'தொழில்நுட்பத்தை அடிப்படையாக கொண்ட சமூகமொன்றும் மற்றும் நோக்கி வருவதற்கு அரசின் நிகழ்ச்சித்திட்டமொன்றுடன் இணைந்ததாக இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபையினால் (SLAAMB) மேற்கொண்ட முயற்சி 2020 ஆம் ஆண்டின் இறுதிக் காலண்டில் முகாமைத்துவ தகவல் முறைமையொன்றை அபிவிருத்தி செய்வதற்கு வழி வகுத்தது. அதன் பிரகாரம் இங்கை தகவல் தொழில்நுட்ப முகவராண்மை இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபைக்காக (SLAAMB) முகாமைத்துவ தகவல் முறைமை செயற்திட்டத்தின் மதியுரையாளராக மீண்டும் நியமிக்கப்பட்டது.

இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபையின் (SLAAMB) செயற்பாட்டுக்கான மையப்படுத்தப்பட்ட தகவல் முகாமைத்துவ முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதன் மூலம் கைகளால் செய்யப்படும் ஆவணங்களின் பொது மேந்தலைகளை குறைத்தல், தகவல் களஞ்சியமொன்றை மேம்படுத்துதல்மற்றும் உள்ளக பதவியணியினருக்கு இடையே அதாவது நிறுவனம் மற்றும் அவர்களின் கணக்காய்வாளர்களுக்கு இடையே தகவல்களை செயற்திறனாக பரிமாற்றுதல் எதிர்பார்க்கப்படுகின்றது. இச்செயற்பாடு மூலம் தொழில்துறை பதவியணி பொதுவான தவு கூட்டு முகாமைத்துவ செயற்பாடுகளிலிருந்து விலகுவதற்கும் ஒழுங்குபடுத்தல் முறையொன்று தொடர்பில் தொழில் நிபுணத்துவத்தை அதிகரித்துக்கொள்வதற்கு அவர்களுக்கு திறன்களை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபை (SLAAMB) கையால் எழுதப்பட்ட ஆவணங்களின் பொதுவான செயல்பாட்டைக் குறைப்பது, தகவல் சேமிப்பை மேம்படுத்துதல் மற்றும் உள் ஊழியர்கள் மற்றும் முக்கிய பங்குதாரர்கள், நிறுவனங்கள் மற்றும் அவர்களின் தணிக்கையாளர்களுக்கு இடையே திறமையான தகவல் பரிமாற்றத்தை எளிதாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பொது தரவுத்தள மேலாண்மை நடவடிக்கைகளில் இருந்து பணியாளர்கள் மற்றும் ஒழுங்குமுறை பொறிமுறையில் தொழில்முறை அதிகரிக்க அவர்களுக்கு உதவுகிறது.

2021 ஆம் ஆண்டு முழுவதும் கொவிட் 19 தொற்றுநோய்க்கு மத்தியில், இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபையின் (SLAAMB) அரசாங்க பெறுகை வழிகாட்டுதல்களைப் பின்பற்றி மென்பொருள் உருவாக்குநர்களைத் தேர்ந்தெடுத்தது. இதன் விளைவாக, 2021 ஒக்டோபரில், லங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபையின் (SLAAMB) அதன் முகாமைத்துவ தகவல் முறைமையை திட்டமிட்டு வடிவமைத்து, அபிவிருத்தி செய்து மற்றும் செயல்படுத்த தேர்ந்தெடுக்கப்பட்ட மென்பொருள் உருவாக்குனருக்கு ரூபா38 மில்லியன் பெறுமதியான ஒப்பந்தத்தை வழங்கியது.

இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபையின் (SLAAMB) பணிப்பாளர் சபை தகவல் தொழில்நுட்ப வழிகாட்டல் குழுவின் மேற்பார்வை மற்றும் வழிகாட்டுதலின் கீழ், முகாமைத்துவ தகவல் முறைமை திட்டம் அதன் திட்ட காலசட்டகத்திற்கு இணங்க முறையாக முன்னேற்றமொன்றை அடைந்துவருகின்றது. இதன் விளைவாக, 2021 இன் இறுதிக் அபிவிருத்தியாளரால் நடத்தும் தேவைகள் சேகரிக்கும் செயலமர்வுகளை பூர்த்தி செய்வதற்கும் அனைத்து அடிப்படையல்லாத மொடியுல்களின் விபரங்களை விரிவான மென்பொருள் விவரக்குறிப்பு தேவைகளை மீளனாய்வு செய்து பூர்த்தி செய்வதற்கு இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபைக்கு (SLAAMB) முடியுமாக இருந்தது. அடிப்படை தொகுதிக்கான பணிகள் ஜனவரி 2022 இல் முடிக்க திட்டமிடப்பட்டிருந்ததுடன் தற்போதைய முன்னேற்றத்தின் அடிப்படையில், இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபையின் (SLAAMB) தகவல் அமைப்பினை 2022 நடுப்பகுதியில் செயல்பத்தலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

12.3 நிதிக் கூற்றுக்களை மீளாய்வு செய்யும் பொறிமுறையினை ஆய்வு செய்வதற்கான மதியுரையாளர் ஒருவரை நியமித்தல்

2020 ஆம் ஆண்டின் இறுதி மாதத்திலிருந்து இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபையால் (SLAAMB) ஈடுபடுத்தப்பட்ட ஐக்கிய இராச்சியத்தில் முன்னால் நிறுவன அறிக்கையிடல் ஒழுங்குபடுத்துனர் ஒருவர் காணப்படும் நிதிக்கூற்றுக்கள் மீளாயவு நடைமுறை தொடர்பாக மீளாய்வு செய்து மீளாய்வினை மேவுகை செய்து மேம்படுத்துவதற்காக தேவையான பரிந்துரைகளை செய்தார். கொவிட் 19 வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதற்காக விதிக்கப்பட்ட பயணத் தடை காரணமாக

2021 ஆண்டின் செயற்பாடுகளின் மீளாய்வு

அந்த ஆலோசணை வழிகாட்டி நிகழ்நிலை ஊடாக நடாத்தப்பட்டது.

தற்போதைய செயல்முறை ஆய்வு, தற்போதைய மீளாய்வு செயற்பாடு தொடர்பாக தொழில்நுட்ப பதவியணியினருடன் விரிவான கலந்துரையாடல், ஆவணங்கள் மாதிரியாக மீளாய்வு மற்றும் ஏற்கனவே உள்ள செயல்முறைகள் மற்றும் உலகளாவிய சிறந்த நடைமுறைகளுக்கு இடையிலான இடைவெளிகளின் பகுப்பாய்வு ஆகிய பகுப்பாய்வொன்றை உள்ளடக்கியுள்ளது.

ஆலோசகரால் செய்யப்பட்ட முக்கியமான பரிந்துரைகளுக்கு இடையே மீளாய்வு செய்வதற்கான பொருத்தமான எண்ணிக்கையிலான அறிக்கைகள் மற்றும் ஒரு குறித்தரைக்கப்பட்ட வியாபார முயற்சிகள் கலவை முக்கியமான தீர்மானம் தொடர்பான வழிகாட்டுதல், விரிவான மற்றும் மையப்படுத்தப்பட்ட மீளாய்வு கலவை மற்றும் மீளாய்வு நடவடிக்கைகள், செயற்திறனாக தயாரிப்பவர்கள் கணக்காய்வாளர்கள் மற்றும் முதலீட்டு சமூகம் விரிவான சமூகத்திற்கு தொடர்புனெகாள்ளும் ஊடகங்கள் உட்பட மீளாய்வுகளின் விடயப்பரப்பு மற்றும் ஆழம் மற்றும் சிறந்த அறிக்கையிடல் தவறுகளை குறைபபதனை மேம்படுத்துவதற்காக பின்பற்றப்பட வேண்டிய வெளிவாரி செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபையின் (SLAAMB) மீளாய்வுச் செயற்பாடு அவ்வாறான பரிந்துரைகள் பலவற்றை உள்ளடக்கி மதியுரையாளரின்கள் கட்டம் கட்டமாக செயற்படுத்துவதுடன் தற்போது காணப்படும் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டதன் பின்னர் எஞ்சிய பரிந்துரைகளை அடுத்த ஆண்டுகளின் போது செயயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

13. சூழல் முறைமை சார் நிதிக்கூற்றுக்களை விருத்தி

செய்வதற்கான பங்களிப்பு இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபையினால் (SLAAMB) ஒழுங்குபடுத்தர் பொறிமுறை தொடர்பாக ஒழுங்குபடுத்தல் சுற்றாடல் முறைமையை பலப்படுத்தும் நோக்கில் இணங்கும் தேவைப்பாடு தொடர்பாக நிறுவனங்கள் மற்றும் கணக்காய்வாளர்களின் அறிவினை மேம்படுத்தும் முயற்சிகளின் போது பின்வரும் படிமுறைகள் எடுக்கப்பட்டுள்ளன.

- தரப்பினர்களுக்கு அவர்களின் நிதி அறிக்கையிடல் மேம்படுத்தக்கூடிய வகையில் அவர்களின் அறிவினை காலரீதியில் மேம்படுத்தும் முயற்சி 2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டதுடன் நிதிக்கூற்றுக்கள் மீளாய்வு மற்றும் கணக்காய்வு பரிசோதனை தொடர்பான கண்டுபிடிப்புக்கள் தொடர்பான அறிக்கையொன்று 2021 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்போர் மற்றும் கணக்காளர்களுக்கு வழங்குதல்

- வருடாந்தம் கணக்காய்வு செய்ப்பட்ட நிதிக்கூற்றுக்கள் விழிப்பூட்டுவதற்காக இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபைக்கு (SLAAMB) உரிய வேலைகளில் சமர்ப்பிக்கும் தேவைப்பாடு தொடர்பாக குறிப்பான வியாபார முயற்சிகளுக்கு அறிவித்தலொன்றை வெளியிடல்

- இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபையின் (SLAAMB) ஒழுங்கல் செயற்பாடு தரப்பினர்களுக்கு தெளிவுபடுத்தி அறிவித்தலொன்றை வெளியிடல்

- தாயிலாந்தின் பிணையங்கள் மற்றும் நாணயமாற்று ஆணைக்குழுவினால் ஒழுங்குசெய்யப்பட்ட 8 ஆவது ஆசிய கணக்காய்வு ஒழுங்குபடுத்தல் குழுவின் (AARG) பரிசோதனை செயலமர்வின் வளவாளராக பதவியணியினர் உறுப்பினர் செயற்பட்டார்.

- அறிவினை பகிர்ந்துகொள்வது தொடர்பாக இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபையின் (SLAAMB) செயற்பாட்டின் ஒரு பகுதியாக களனி பல்கலைக்கழகத்தின் கணக்கீட்டு துறையால் ஒழுங்குசெய்யப்பட்ட கணக்கீடு ஆய்வொன்று மற்றும் கல்வியியலாளர்களுக்கான 7 ஆவது சர்வதேச கருத்தரங்கின் (ICARE) பதவியணி அங்கத்தர்களால் சமர்ப்பித்தல் இடம்பெற்றது.

14. வழமை நிலைமைக்கு திரும்புதல்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்போர், கணக்காய்வாளர்கள் மற்றும் இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபையினால் கொவிட் 19 அச்சுறுத்தலை எதிர்நோக்கி வருவதுடன் இலங்கை கணக்காய்வு மற்றும் கணக்கீட்டு நியமங்கள் கண்காணிப்பு சபையினால் (SLAAMB) தனது செயற்பாடுகளுக்காக அர்ப்பணிப்பினை மாற்ற முறாது பேணிச்சென்று 2021 ஆம் ஆண்டின் போது புதிய வழமையான நிலைமையுடன் முன்னோக்கி செல்வதற்கு எடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பாக அறிவித்தலொன்றை வெளியிடப்பட்டது. இச்செயற்பாட்டின் மூலம் நிதிக்கூற்றுக்கள் மற்றும் கணக்காய்விற்கு சமர்ப்பித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் மற்றம் பொதுவான நிர்வாகம் தொடர்பில் கவனம் செலுத்துகின்றது. இந்த தொடர்பாடல் தரப்பினர்களுக்கான அறிவித்தலொன்றாக விநியோகிக்கப்பட்டது.

2021 ஆம் ஆண்டின் மேற்கொள்ளப்பட்ட நிதிக்கூற்றுகள் தொடர்பான மீளாய்வின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட அவதானிப்புகள்

1. கண்ணோட்டம்

இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபையானது (எஸ்எல்ஏஏஎஸ்எம்பீ) வருடாந்த கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களை தயாரித்து சமர்ப்பிக்கும் போது குறிப்பிட்ட வணிக நிறுவனங்களால் (SBEs) இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குவதை தொடர்ந்து கண்காணித்து வந்தது. குறித்த செயற்பாட்டை மேற்கொள்ளும் போது எஸ்எல்ஏஏஎஸ்எம்பீ நாட்டின் நிதி அறிக்கையிடலின் நம்பகத்தன்மையை மேம்படுத்துவதற்காக அதன் நடவடிக்கையின் போது பிரயோகிக்கக்கூடிய நியமங்களுடன் இணங்குமாறு SBEs ஐ தூண்டுவதற்காக குறித்த நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்கிறது.

2. எஸ்எல்ஏஏஎஸ்எம்பீ மூலம் நிதிக்கூற்றுக்களை கண்காணித்தல்

ஆண்டின் போது, எஸ்எல்ஏஏஎஸ்எம்பீ ஆனது 525 SBEs ஐ பிரதிநிதித்துவப்படுத்தும் 552 தொகுதி நிதிக்கூற்றுக்களின் மீளாய்வுகளை பூர்த்தி செய்தது. மீளாய்வு செய்யப்பட்ட மொத்த SBEs இல், 48% SBEs ஒழுங்குபடுத்தப்பட்ட நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தியதுடன் 52% தனியார் நிறுவனங்களாகும்.

இச் செயன்முறையின் போது, எஸ்எல்ஏஏஎஸ்எம்பீ ஆனது மீளாய்வு செய்யப்பட்ட ளுடீநுள சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வகைகளையும் பிரதிநிதித்துவப்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்கு ஒவ்வொரு முயற்சியையும் மேற்கொண்டதுடன் நடைமுறைக்குக் கூடிய வரையில் தனியார் நிறுவனங்களாக உள்ள SBEs இன் சுழற்சி ரீதியான மேவுகை செய்யப்படுகிறது.

3. SBEs இற்கான எஸ்எல்ஏஏஎஸ்எம்பீ இன் ஒழுங்குமுறை ஆதரவு

கொவிட் 19 தொற்றுநோய்க்கு மத்தியில், நிதிக்கூற்றுக்களை சரியான நேரத்தில் தயாரிப்பதற்கும், ஒழுங்குமுறை அதிகாரிகளுக்கு சரியான நேரத்தில் சமர்ப்பிப்பதற்கும் SBEs எதிர்கொள்ளும் சவால்களுக்கு சாட்சியாக, எஸ்எல்ஏஏஎஸ்எம்பீ நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல், அனைத்து SBEs உம் ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகளுடன் இணங்கக்கூடியவாறு தற்காலிக நடவடிக்கையாக இணையதளத்தில் விபரிக்கப்பட்டுள்ள தகவல் மற்றும் தொடர்பாடல் செயன்முறையை கோரி பெறுதல் தொடர்பாக பின்பற்றப்பட்ட அதன் மாற்றியமைக்கப்பட்ட அணுகுமுறைகளைத் தொடர்ந்தது.

4. கண்காணிப்புக்காக நிதிக்கூற்றுக்களை தெரிவுசெய்தல்

தற்போதுள்ள நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு முறைமையை மதிப்பாய்வு செய்வதற்கும் உலகளாவிய சிறந்த நடைமுறைகளுடன் இணைந்து, மீளாய்வு மேவுகையை செயற்திறனாக மேம்படுத்துவதற்கான மாற்றங்களை பரிந்துரைப்பதற்கும் ஈடுபடுத்தப்பட்டுள்ள வெளிநாட்டு ஆலோசகரின் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு எஸ்எல்ஏஏஎஸ்எம்பீ ஆனது மீளாய்வுக்கான நிதிக்கூற்றுக்களை தெரிவுசெய்வதற்கு சீரற்ற மற்றும் சுழற்சி அணுகுமுறைகளுடன் ஆபத்து அடிப்படையிலான அணுகுமுறையை இணைத்துள்ள கலவையான மாதிரியொன்றை பின்பற்றியது. இடர் அடிப்படையிலான அணுகுமுறையின் கீழான மதிப்பாய்வுகள் தொழில்துறை சார்ந்த இடர் அளவுகோல்களின் அடிப்படையில் முன்னரே தீர்மானிக்கப்பட்ட கருப்பொருட்கள் தொடர்பாக நடாத்தப்படுகின்றன. குறித்த தொழில் சார்ந்த இடர் அளவுகோல்களுக்கு உட்படாத ளுடீநுள தற்செயலான அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட அத்தகைய ளுடீநுள இன் சுழற்சி மேவுகை மேற்கொள்ளப்பட்ட முறையில் தெரிவுசெய்யப்படுகின்றன.

அதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு செயற்பாட்டின் அணுகுமுறைகள் பின்வருமாறு இடம்பெறுகின்றன்

- நிதிக்கூற்றுக்களின் விரிவான மீளாய்வு
- தொழில் சார்ந்த இடர் அளவுகோல்களின் அடிப்படையில் கருப்பொருள் மையப்படுத்தப்பட்ட மீளாய்வு

5. இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குவதை கண்காணிப்பதன் முடிவுகள்

ஆண்டின் போது இலங்கை கணக்கீட்டு நியமங்களிலிருந்து பொருண்மையான விலகல்கள் கண்டறியப்பட்ட இடங்களில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து சமர்ப்பிப்பதில் தேவையான திருத்தங்களைச் செய்வதற்கு எஸ்எல்ஏஏஎஸ்எம்பீ மூன்று SBEs இடமிருந்து உறுதிமொழிகளைப் பெற்றது, குறித்த SBEs இல் இரண்டு அவற்றின் நிதிக்கூற்றுக்களில் பிரதிபலித்த தேறிய சொத்துக்களில் ரூபா 733 மில்லியன் அதிகரிப்பை விளைவித்திருந்ததுடன் ஏனைய SBE இன் விளைவு இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. அதன் பிரகாரம் மீளாய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களில் 1% இணக்கமற்றவையாகவும் மீளாய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களில் 56% இணக்கமானவையாகவும் 43% நிதிக்கூற்றுக்கள் உதவிக் கடிதங்கள் மூலம் தெரிவிக்கப்பட்ட அவதானிப்புக்களுக்கு இணங்கியவையாகவும் 2021 ஆம் ஆண்டின் போது மீளாய்வு கண்டுபிடிப்புக்கள் வெளிப்படுத்தியிருந்தன. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது உதவிக் கடிதங்களை வழங்குவதில் காணப்படுகின்ற 3% அதிகரிப்பு, ஆண்டின் போது நடாத்தப்பட்ட கவனம் செலுத்தப்பட்ட மீளாய்வுகளின் கண்டுபிடிப்புக்களின் அதிகரிப்பிற்கு பங்களிக்கின்றன. அவர்களது நிதி அறிக்கையிடலை மேம்படுத்தும் நோக்கத்துடன் 237 தொகுதி நிதிக்கூற்றுக்கள் தொடர்பான உதவிக் கடிதங்கள் மூலம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

6. தேவையான திருத்தங்களைச் செய்வதற்கு SBEs இடமிருந்து பெறப்பட்ட வேலைத்திட்டங்கள்

இலங்கை கணக்கீட்டு நியமங்களிலிருந்தான விலகல்கள் பற்றிய கண்டுபிடிப்புகளின் பொருண்மைத்தன்மையின் அடிப்படையில், எஸ்எல்ஏஏஎஸ்எம்பீ பின்வரும் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து சமர்ப்பிப்பதில் திருத்தங்களைச் செய்வதற்கு மூன்று SBEs இடமிருந்து வேலைத்திட்டங்களைப் பெற்றது.

SBEs ஆல் இணங்காத இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கான (முன்நிர்ணயிக்கப்பட்ட எஸ்எல்எவ்ஆர்எஸ்/எல்கேஏஎஸ்) தொடர்புடன் சேர்த்து பெறப்பட்ட

2021 ஆம் ஆண்டின் மேற்கொள்ளப்பட்ட நிதிக்கூற்றுகள் தொடர்பான மீளாய்வின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட அவதானிப்புகள்

வேலைத்திட்டங்களிற்கான உருப்படிகளின் வகைகள் பின்வருமாறுள்ளன்

- கையகப்படுத்திய நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களில் ஏனைய செலுத்த வேண்டியவைகளாக, வணிகக் கலவையொன்றின் போது கையகப்படுத்துபவரின் நிகழ்த்தக்க பொறுப்புகளை பிழையாக இனங்காணுதல். (குறிப்பு எல்கேஏஎஸ் 37 பந்திகள் 13 M, 14, 16, 17 மற்றும் 20)

- வியாபாரம் மற்றும் தொடர்புடைய தரப்பினரிடமிருந்தான ஏனைய பெறவேண்டியவை தொடர்பாக குறித்த தொடர்புடைய தரப்பினர்களிடமிருந்து அவர்களது அறவிட வேண்டிய பெறுமதிகளிலிருந்து பெறவேண்டிய தொகைகளை பிரதிபலிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளுக்கான படியை இனங்காணத் தவறியமை. (குறிப்பு எஸ்எல்எவ்ஆர்எஸ் 9 பந்திகள் 5.5.1)

- இலங்கை கணக்கீட்டு நியமங்களின் தேவைப்பாடுகளுக்கு இணங்க வாடகைக் கொள்வனவு பெறவேண்டியவைகள், குத்தகை பெறவேண்டியவைகள் மற்றும் ஏனைய கடன்கள் மற்றும் நிதி கம்பனியின் பெறவேண்டியவைகள் தொடர்பாக எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளுக்கான படியை இனங்காணத் தவறியமை. (குறிப்பு எஸ்எல்எவ்ஆர்எஸ் 9 பந்திகள் 5.5.1)

2021 ஆம் ஆண்டின் போது பெறப்பட்ட வேலைத்திட்டங்களின் விபரங்கள் பக்கம் 28 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

7. நியமங்களுடன் இணங்குவதை மேம்படுத்துவதற்காகத் தெரிவிக்கப்படும் அவதானிப்புக்கள்

பொருண்மையானவையாக உள்ள இலங்கை கணக்கீட்டு நியமங்களிலிருந்தான விலகல்கள் கண்டறியப்பட்டன, ஆனால் நியதிச்சட்ட ஏற்பாடுகளை பயன்படுத்தி நடைமுறைகளைப் பயன்படுத்த வேண்டியதில்லை என்பது SBEs இற்கு உதவிக் கடிதங்கள் மூலம் அவதானிப்புகளாகத் தெரிவிக்கப்பட்டன, இதனால் SBEs எதிர்காலத்தில் தேவையான இடங்களில் அவர்களின் சொந்தமாக இணக்கப்பாட்டை மேம்படுத்த முடியும்.

அத்தகைய மீளாய்வுகளை நடாத்துவதற்கான இரண்டு அணுகுமுறைகளின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு தொடர்பான கண்டுபிடிப்புகளின் விபரங்கள் பின்வருமாறுள்ளன.

7.1 நிதிக்கூற்றுக்களின் விரிவான மீளாய்விலிருந்தான கண்டுபிடிப்புகள்

உதவிக் கடிதங்களின் வடிவில் ளுடீறுளு இற்கு தெரிவிக்கப்பட்ட அவதானிப்புக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களின் விரிவான மீளாய்விலிருந்தான முக்கிய கண்டுபிடிப்புக்கள் பின்வருமாறுள்ளன.

- 57 SBEs இல் நிறுவனத்திற்கு பாதுகாப்பற்ற நிதிக் கருவிகளிலிருந்து எழுகின்ற அபாயங்களின் தன்மை மற்றும் அளவு மற்றும் எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளிலிருந்து எழுகின்ற தொகைகள் தொடர்பாக அளவு மற்றும் தரமான தகவல்கள் போதுமானளவில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. (குறிப்பு எஸ்எல்எவ்ஆர்எஸ் 7 பந்திகள் 31 முதல் 42 வரை)

- பயன்படுத்தப்பட்ட மதிப்பீட்டு நுட்பங்கள், மதிப்பீட்டு நுட்பங்களுக்கான உள்ளீடுகள், பயன்படுத்தப்படும் குறிப்பிடத்தக்க கவனிக்க முடியாத உள்ளீடுகள் பற்றிய அளவுத் தகவல்கள், உள்ளீடுகளிற்கு மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க சீராக்கங்கள் மற்றும் நியாயமான பெறுமதியில் அளவிடப்படும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் ஒவ்வொரு வகுப்பிற்கும் நியாயமான பெறுமதி படிநிலை என்பன தொடர்பான வெளிப்படுத்தல்கள் போதுமானளவில் 42 SBEs இல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. (குறிப்பு எஸ்எல்எவ்ஆர்எஸ் 13 பந்திகள் 91 மற்றும் 93)

- நிதிச் சொத்து அல்லது நிதிச் சொத்துகளின் தொகுதி தொடர்பாக நட்டக்கழிவு புறநிலை சான்றுகள் காணப்படும் போது SME துறையில் உள்ள 12 உட்பட 37 SBEs இல் நட்டக்கழிவு கிரயத்தில் அளவிடப்படுகின்ற நிதி சொத்துக்கள் தொடர்பாக எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளுக்கான நட்டப் படி இனங்காணப்படவில்லை. (குறிப்பு எஸ்எல்எவ்ஆர்எஸ் 9 பந்தி 5.5.1 மற்றும் எஸ்எம்ஈ பிரிவு 11 பந்தி 11.21)

- எஸ்எம்ஈ துறையில் உள்ள 3 உட்பட 29 SBEs இல் பயன்படுத்தப்படாத வரி இழப்புகளைப் பயன்படுத்துவதற்கு எதிர்கால வரி விதிக்கக்கூடிய இலாபத்தின் அளவைப் பொருட்படுத்தாமல், பிற்போடப்பட்ட வரி பொறுப்புக்களை இனங்காணும் போது அல்லது பிற்போடப்பட்ட வரி சொத்துக்களை இனங்காணும் போது அனைத்து வரி விதிக்கக்கூடிய தற்காலிக வேறுபாடுகளையும் கருத்தில் கொள்ளவில்லை. (குறிப்பு எல்கேஏஎஸ்12 பந்திகள் 15, 24, 34 மற்றும் 48 மற்றும் எஸ்எம்ஈ பிரிவு 29 பந்தி 29.12)

- எஸ்எம்ஈ துறையில் உள்ள 2 உட்பட 23 SBEs இல் வரிச் செலவினத்திற்கும் கணக்கீட்டு இலாபத்திற்கும் இடையே உள்ள தொடர்பு மற்றும் வரி இழப்புக்கள் காரணமாக

